# Salve Regina




செப்டம்பர் 2009 மலர்:1 இதழ்: 2

## “Quis Ut Deus - சர்வேசுரனுக்கு நிகர் யார்?”



Salve Regina

"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக முடிந்தவரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடமுள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியமாகும்."

*– பாப்பரசர் அர்ச். 10–ம் பத்திநாதர்.*

**ஆசிரியர் & வெளியீடுவோர்**
சங். வலன் D. ராஜகுமார்

**உதவி ஆசிரியர்**
திரு. P. பிரான்சிஸ் குமார்

**கட்டுரையாளர்கள்**
சங். ஜோஸப் ஃபைஃபர்
Dr. S. வின்ஸென்ட்
திரு. L.M. அந்தோணி
திரு. P. J. டேவிட்
Dr. R. அருள் ஞானராஜ்.

**வடிவமைப்பு**
T.V. ரொசாரியோ

**விநியோகம்**
திரு. P. போத்திராஜ்
திரு. R.P. இருதயராஜ்
திரு. M. இன்னோசென்ட்
திரு. A. கிளமென்ட்
திரு. T. வின்ஸென்ட் ராய்ஸ்
திரு. C. சந்தானராஜ்
திரு. R. பயஸ் ஜெபசிங்
திரு. R. மிக்கேலஸ்
திரு. G. அருள் மரிய விக்டர்

**நன்கொடைகள், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
Rev. Fr. Valan Rajakumar
'Salve Regina'
Marcel Lefebvre Place
8A/3, Annie Nagar
Seevalaperi Road
Palayamkottai - 627002.
:0462 - 258620 ; 2572389
Mobile: 94426 25158

**அச்சிடுவோர்**
மாதாவின் சூசை அச்சகம்
தூத்துக்குடி ! 2

## "...முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவன் எவனோ, அவனே இரட்சண்யம் அடைவான்..." (மத். 10:24.)

சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

இறுதிநிலைமை அல்லது முடிவுபரியந்தம் நிலைத்திருத்தல் என்பது வாழ்வின் இறுதிவரையிலும் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் நிலைத்திருத்தலைக் குறிக்கும். இப்படி இறுதிவரையிலும் தேவ அன்பில் ! விசுவாசத்தில் ! தேவ வரப்பிரசாதத்தில் நிலைத்திருப்பவனே இரட்சண்யம் அடைவான் என்று இஸ்பிரீத்துசாந்துவானவர் போதிக்கிறார். திரிதெந்தீன் பொதுச்சங்கம் அர்ச். அகுஸ்தினாரின் வார்த்தையைப் பயன்படுத்தி இந்த இறுதி நிலைமையானது Magnum usque in finem perseverantiae donum ! முடிவுபரியந்தம் நிலைத்திருத்தல் என்பது மிகவும் உந்நதமான வரம் என்று அழைக்கின்றது. இந்த வரத்தின் சுபாவத்துக்கு மேலான குணத்தைப்பற்றி நமதாண்டவர், "...பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தருளினவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு உம்முடைய நாமத்தினாலே அவர்களைக் காத்தருளும்..." (அரு. 17:11.) என்று மன்றாடுகிறார். பரம பிதாவும், சேசுக்கிறீஸ்துவும் ஒன்றாயிருக்கிறார்கள். அதுபோலவே சேசுக்கிறீஸ்துவின் மக்களாகிய நாமும் ஒன்றாக ! ஒரே விசுவாசம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அதுவும் கடைசிவரையிலும் அவ்வாறு இருக்கவேண்டும் என்று ஆசித்து தமது பிதாவை நமதாண்டவர் மன்றாடுகிறார்.

இதனைப்பற்றியே விவரிக்கும் அர்ச். சின்னப்பர் "உங்களுக்குள் அந்த நற்கிரியையைத் துவக்கினவர் **சேசுக்கிறீஸ்துவின் நாள்வரையில்** அதை முற்றுமுடிய நடத்துவாரென்று நம்புகிறேன்" (பிலிப். 1:6.). இதிலும் நமக்குள் துவக்கப்பட்ட நற்கிரியை ! தேவ இஷ்டப்பிரசாதம் சேசுக்கிறீஸ்துவின் நாள்வரையில் அதாவது கடைசிநாள் வரையிலும் முற்றிலும் நிறைவேற நடத்தப்பட ! நிலைத்திருக்க வேண்டும் என்று அர்ச். சின்னப்பர் நம்புகிறார்.

இறுதிநிலைமை வரத்தை அர்ச். இராயப்பர் தமது நிருபத்தில்: "கிறீஸ்து சேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராகிய சர்வ கிருபையுள்ள சர்வேசுரன் கொஞ்சக் காலம் துன்பப்படுகிறவர்களை உத்தமராக்கி **உறுதிப்படுத்தி ஸ்திரப்படுத்துவார்**" (1 இரா. 5:10.). இறுதிவரையில் நிலைத்திருக்க சர்வேசுரனுடைய உதவி வேண்டும் என்று உணர்த்துகிறார்.

எனவே இறுதிநிலைமை என்பது சர்வேசுரன் நமக்கு வழங்கும் இலவசக் கொடை என்பதில் ஐயமில்லை. கடைசிவரையில் நிலைத்திருக்கச் செய்ய சர்வேசுரன் தாமே காத்து ! நடத்தி ஸ்திரப்படுத்துவார் என்று சுவிசேஷம் நமக்கு உணர்த்துகிறது.

இதனைப்பற்றியே திரிதெந்தீன் சங்கம் "ஒரு விசேஷ வெளிப்படுத்துதல் மூலம் அறியாமல் எவனாவது ஒருவன் கடைசி நிலைமையாகிய உந்நத கொடையை முழுமையாகவும், தவறாத நிலையோடு கொண்டிருக்கிறேன் என்று கூறுவானாகில்; அவன் சபிக்கப்படக் கடவான்" ( காண்க 6!வது அமர்வு சட்டம் 16) என்று எச்சரிக்கிறது. நாம் நம்முடைய இந்த ஜீவியத்தில் இறுதிநிலைமையை உறுதி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம் என்று திருச்சபை இதன் மூலம் நமக்குப் போதிக்கிறது.

இந்த பெரிய வரத்தை அறியவும், அதனை சம்பாதிக்கவும் நாம் திறனில்லதவர்களாய் இருக்கிறோம். இருந்தாலும் இதனை குறித்து நாம் ஒன்றும் செய்ய இயலாது என்று எண்ணி இருத்தலாகாது. வேதசாஸ்திரிகள் அனைவரும் இறுதி நிலைமை வரமானது விசுவாசமுள்ள ஜெபத்தின் வல்லமையால் அடையமுடியும் என்று ஒருவாய்ப்படக் கூறுகிறார்கள். அர்ச். லிகோரியார் நமது அன்றாட ஜெப விண்ணப்பத்தில் இந்த வரத்தை மன்றாடுதல் பிரதானமாக இருக்கவேண்டும் என்று விளக்குகிறார். எனவே நாம் நமது சொந்த கடைசிநிலைமைக்கு ஜெபிக்கவேண்டும். நமது அன்றாட வாழ்வில், கிறீஸ்தவப் புண்ணியங்களை அனுசரிப்பதில் நாம் **நிலைத்திருக்க** வேண்டும்.

நாம் வாழும் இந்த நவீன லோகாதாய சமுதாயத்தில் எல்லா சிரமங்கள், இடையூறுகள் வந்தாலும், சுவிசேஷம் நமக்குப் கற்பிக்கிறவற்றை மட்டும்தான் நாம் பின்பற்ற வேண்டுமேயொழிய இந்த உலகம் போதிப்பவற்றையல்ல. அர்ச். பிலிப் ஹோவர்ட் தாம் கொண்ட கத்தோலிக்க விசுவாசத்திற்கு பிரமாணிக்கமாய் இருப்பதற்காக 11 வருடங்கள் கொடிய தனிமைச் சிறைவாசத்தை அனுபவித்தார். அவரது மரண சமயத்தில் 11 ஆண்டுகளாய் சந்திக்காத மனைவி, மக்களைக் காண அனுமதி கேட்ட அவரது வேண்டுகோள் அரசி எலிசபெத்தால் மறுக்கப்பட்டது. ஆனாலும் கத்தோலிக்க விசுவாசத்தை இகழ்ந்து, புராட்டஸ்டாண்ட் ஆலய வழிபாட்டில் பங்கேற்றால் சிறை தண்டனை நீக்கப்படும், குடும்பத்தினரோடு வாழலாம், அபகரிக்கப்பட்ட திரளான செல்வங்கள் சொத்துக்கள் மீண்டும் வழங்கப்படும் என்ற அரசியின் ஆசை வார்த்தைகளை உடனே மறுத்தார் அர்ச். பிலிப் ஹோவார்ட். தாம் பெற்றுக்கொண்ட சத்திய கத்தோலிக்க விசுவாசத்துக்கு முன் அனைத்தும் ஒன்றுமில்லை என்று கடைசிவரையில் தமது விசுவாசத்தில் உறுதியாக இருந்தார். டவர் சிறைச்சாலையிலே அநாதையாக மரித்தார். மோட்ச சம்பாவனையை அடைந்தார். அர்ச்சியசிஷ்டவரானார்! எனவே கடைசிநிலைமை வரம் பெற்றதற்கு அர்ச். பிலிப் ஹோவார்ட்டே நல்ல உதாரணமாகத் திகழ்கிறார். (காண்க: கத். விசுவாசத்திற்காக உயிர் நீத்தவர்கள் கட்டுரை - பக்கம். 5)

நாம் இந்த தலையங்கத்தை எழுதும்போது நமது அர்ச். 10-ம் பத்திநாதர் சபைக்கும், பரி. பாப்பரசருக்கும் எதிராக ஸ்வீடன் நாட்டு தொலைகாட்சி அலைவரிசையால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள புதிய தாக்குதல் பற்றிய செய்தியைக் கேட்க நேரிட்டது. 8 மாதங்களுக்கு முன்பு அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் 4 மேற்றிராணிமார்களுக்கு எதிரான திருச்சபை விலக்கம் ஆணையை வத்திக்கான் வாபஸ் பெற்றபோது திருச்சபையை உலுக்கியது போலவே இப்போதும் தாக்குதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இத்தகைய சாத்தானின் தாக்குதல்களுக்கு மத்தியிலும், நாம் விடாமல் பற்றிக்கொண்டிருக்கும் கத். திருச்சபையின் விசுவாசத்தையும், பாரம்பரியத்தையும் கைக்கொண்டு அதில் இறுதிவரையிலும் நிலைத்திருக்க வேண்டும். நமதாண்டவரும், நமது பரிசுத்த ஆண்டவளும், அர்ச். மிக்கேல் சம்மனசானவரும் சாத்தானுக்கு எதிரான இந்த இறுதிப் போராட்டத்தில் நாம் உறுதியாக நிலைத்திருக்க உதவுவார்களாக!

அன்பார்ந்த சகோதரர்களே, ஜெபமாலைப் போரின் கருத்துகளுக்காக ஜெபமாலை ஜெபிப்பதில் நிலைத்திருங்கள். ஒவ்வொரு மாதமும் நீங்கள் ஜெபித்து ஒப்புக்கொடுத்த ஜெபமாலைகளின் எண்ணிக்கையை எமக்கு தெரியப்படுத்துங்கள்.

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை,**

பாளையங்கோட்டை.



சங். திதியே போன்தெர் சுவாமி

அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையைச் சார்ந்த சங். திதியே போன்தெர் சுவாமிகள் கடந்த செப்டம்பர் மாதம் 15–ம் தேதி வியாகுல மாதா திருநாளன்று சாலை விபத்தில் மரணமடைந்தார். 1972–ல் குருமடத்தில் சேர்ந்த இவர் தனது குருத்துவத்தின் ஆரம்ப காலத்தில் ஈக்கோன் குருமடத்தில் திருவழிபாட்டு பேராசிரியராகவும், பின்னர் அல்பானோ குருமடத்தின் இயக்குனராகவும், பாரீஸ், நான்த்து நகர குருக்கள் இல்லத்தின் முதல்வராகவும் வெகு காலம் பணிபுரிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய ஆன்ம இளைப்பாற்றிற்காக வேண்டிக்கொள்வோமாக.

**Requiem aeternam dona ei Domine et lux perpetua luceat ei.**
**Requiescat in pace. Amen.**

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## I. விசுவாசத்தின்பேரில் வியாக்கியானம் (தொடர்ச்சி)

### 7. விசுவாசம் பாவத்தினால் அழிந்துபோகிறதா?

ஒரு சாவான பாவம் செய்தவுடனே தேவசிநேகம் என்கிற புண்ணியமும், நல்லொழுக்கத்துக்கடுத்த நான்கு புண்ணியங்களும், சுபாவத்துக்கு மேற்பட்ட மற்றப் புண்ணியங்களும், இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரங்களும், மேலும் அந்த நாள் மட்டும் அடைந்த சகல பேறுபலன்களும் முதலாய் நீங்கிப்போகின்றன. ஆனால் சர்வேசுரனுடைய அளவில்லாத இரக்கத்தினால், பாவிகளுடைய ஆத்துமத்தில் விசுவாசம், நம்பிக்கையென்கிற இரண்டு புண்ணியங்களும் நிலைத்து நிற்கின்றன. இவைகளின் உதவியால் பாவிகள் அதிக இலகுவாய் மனந்திரும்பக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள். பாவத்தை விட்டு மோட்சத்தில் சேரத்தக்கதாக என்ன செய்யவேண்டுமென்று விசுவாசத்தோடிருக்கிறவன் நன்றாய் அறிவான். இதை அறியும்படி அவனுக்கு விசேஷ அநுக்கிரகப்பிரசாதம் கிடைக்கும். மேலும் அவனிடத்தில் தேவ நம்பிக்கையிருக்கிறதினாலே, சர்வேசுரனுடைய கிருபையை நம்பி, அவரை வேண்டிக்கொண்டு, மனந்திரும்ப தனக்கு அவசியமான உதவி கிடைக்கும் என்னும் உறுதியான நம்பிக்கையோடு பாவத்தைத் தள்ளப் பிரயாசைப்பட்டுக்கொண்டு வருவான்.

**1) விசுவாசமும் நம்பிக்கையும் எந்தப் பாவத்தினால் அழிந்துபோகிறது?** நம்பிக்கையானது அந்தப் புண்ணியத்துக்கு விரோதமான பாவமாகிய அவநம்பிக்கையால் அழிந்துபோகிறது. நம்பிக்கை நீங்கிப்போன பிறகு. பாவிகளுடைய ஆத்துமத்தில் விசுவாசம் மாத்திரம் தனியே இருக்கக்கூடும். ஆனால் விசுவாசத்தை இழந்துவிடும்படி நேரிட்டால், உடனே நம்பிக்கையும் மற்ற எல்லாப் புண்ணியங்களும் அவசியம் அதை விட்டு நீங்கிப்போகும். விசுவாசத்துக்கு நேர்விரோதமான அவிசுவாசத்தினால் மாத்திரம் விசுவாசம் கெட்டுப்போகிறது.

**2) விசுவாசத்திற்கு விரோதமான பாவங்களென்ன?** யாதொரு வேத சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதிருப்பதும், அதைப்பற்றி மனம்பொருந்திச் சந்தேகப்படுகிறதும், சத்திய வேதத்தை மறுதலித்து பதிதர், அஞ்ஞானிகள், துலுக்கர் முதலியவர்களுடைய பொய் மதங்களில் சேருகிறதும், அவர்கள் செய்கிற ஆராதனை, சடங்கு களுக்குப் பங்காளியாயிருப்பதும், பசாசைக் கும்பிடுகிறதும், அதற்குப் பலி ஒப்புக்கொடுக்கிறதும், அதன் பலிகளுக்கு உதவி செய்கிறதும், பேயிடத்திலிருந்து சௌக்கியம் முதலிய உலக நன்மைகளைக் கேட்கிறதும், சுபாவமாய் அறியக்கூடாத காரியங்களை அதன் வழியாக விசாரிக்கிறதும், இவை முதலியவை விசுவாசத்துக்கு விரோதமான பாவங்களாகும்.

**3) அஞ்ஞானிகளுக்குப் புத்திசொல்லுகிறது:** விசுவாசம் இரட்சண்யத்துக்கு இவ்வளவு அவசியமாயிருக்கிறதினால், நல்ல கிறீஸ்தவர்களும், விசேஷமாய் உபதேசிமார்கள் எல்லோரும் அஞ்ஞானிகளின் மனந்திரும்புதலுக்காக வேண்டிக்கொள்கிறதும் அல்லாமல், எப்போதும் அவர்களுக்கு நன்மாதிரிகை காண்பித்து, புத்திமதி சொல்லி சமயத்துக்குத் தக்கபடி வேத சத்தியங்களை அறிவிக்கக்கடவார்கள்.

## II. சர்வேசுரன் பேரில்

**சர்வேசுரன் உண் ா?** நாம் சர்வேசுரனை ஐம்புலன்களால் பரீட்சித்து அறியாவிட்டாலும், புத்தி நியாயத்தால் அவர் இருக்கிறார் என்னும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியது. அதெப்படியென்றால், நாம் ஆத்துமத்தைக் காணாவிடினும், அதன் கிரியைகளைக்கொண்டு அது உண்டென்று அறிகிறோம். ஓர் வீட்டிலுள்ள நெருப்பை நாம் பார்க்காத போதிலும், அந்த வீட்டிலிருந்து எழும்புகிற புகையினால் புகைக்குக் காரணமான பொருளாகிய நெருப்பு உள்ளே உண்டென்று தீர்மானிக்கிறோம். அதுபோலவே நாம் கண்டு அறியும் உலக காரியங்களின் மூலமாய் அவைகளுக்குக் காரணமான சர்வேசுரன் உண்டென்னும் சத்தியம் தெளிவாய்த் துலங்குகிறது.

1. சர்வேசுரன் உண்டென்று பலவழியாக ஒப்பிக்கலாம். அவைகளில்,

(i). **முதலாவது: கிரமமாயுள்ள உலகமுண்டாயிருப்பதே, தன்னிலே தானாயுள்ள ஓர் சிருஷ்டிகர் உண்டென்பதே உண்மை:!** உலகம் தன்னிலேதானே இருப்பதில்லை. ஏனென்றால் உலகம் தன்னிலே தானாயிருந்தால், அது சகல மேலான நன்மைகளையும் அவசியமாயும் அளவற்றவிதமாயுங் கொண்டிருப்பதுமன்றி, யாதொரு குறையுமில்லாதிருக்கவேண்டும். ஆனால் அநுபோக சித்தியால் உலகத்துக்கு இவ்வித அளவற்ற சுபாவமும், குறையற்ற தன்மையுமில்லையென்று அறிகிறோம். ஆதலால் அதற்கு அளவையும் எல்லையும் கட்டளையிட்ட ஓர் காரண கர்த்தர் இருப்பது அவசியம்.

**1) ஆயிரம் அடி நீளமுள்ள ஓர் பெரிய அரண்மனையைப் பார்த்தால்,** அந்த அரண்மனை இத்தனை அடி நீளம், உயரம், அகலமுள்ளதாயிருக்க வேண்டுமென்றும், அதற்குமேல் பெரியதாய் இருக்கக்கூடாதென்றும் திட்டப்படுத்தினது அரண்மனையல்ல, அதைக் கட்டினவனான காரண கர்த்தாவே இதற்கு இந்த அளவையும் எல்லையையும் ஏற்படுத்தினானென்று சொல்லுவோம்.

**2) அதுபோலவே, உலகம் தன் இருக்கையையும் தன் அளவையும் அதற்குப் புறம்பாயுள்ள ஓர் வஸ்துவினின்று பெற்றிருக்கவேண்டும்.** அந்தக் காரணம் தன்னிலே தானாயிருந்து, உலகத்துக்கு காரணமாயிருந்திருக்கவேண்டும், அல்லது மற்றொரு வஸ்துவினின்று தன்னிருக்கையைப் பெற்றிருக்கவேண்டும்.

அது மற்றொரு வஸ்துவினின்று உண்டானதென்று வைத்துக்கொள்வோம். இது விஷயம் தெளிவாகும்பொருட்டு, கோழியின் உதாரணத்தைச் சற்று ஆராய்ந்து பார்க்கலாம். கோழியானது எங்கேயிருந்து வருகிறது? முட்டையினின்று. அந்த முட்டை எங்கேயிருந்து வருகிறது? ஓர் கோழியினின்று. இவ்விதம் ஓயாமல் கேட்டுக்கொண்டு போனோமானால், கடைசியாய் முதல் கோழியை உண்டாக்கினது யார் என்று கேட்கவேண்டியிருக்கும். இப்போது நாம் கோழியைப்பற்றி உரைத்ததையே உலகத்திலுள்ள மற்றச் சகல சிருஷ்டிகளையும் பற்றிச் சொல்லக்கூடும்.

ஆதலால் புத்தி ஏற்றுக்கொள்ளும்படி, கடைசியாக தன்னிலே தானாயுள்ள ஓர் பொருளை ஏற்றுக்கொள்ளவேண்டியது. ஏனெனில் தன்னிலே தானாயிராத பொருள் அளவும் எல்லையுமுள்ளதாயிருப்பதால், அது ஒருநாள் இல்லாமல் இருந்திருக்கவேண்டும். ஆனால் இல்லாத பொருள் தனக்குத்தானே எப்படித் துவக்கத்தையும் உயிரையும்; அளவையும் எல்லையையும் கொடுத்துக் கொள்ளக்கூடும்?

(தொடரும்

# 'Sanguis Martyrum Semen Christianorum'

(வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

**(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)**

## (6) அர்ச். பிலிப் ஹோவார்ட் (தொடர்ச்சி)

எர்ல் குடும்பத்து பிரபு பிலிப் ஹோவார்ட்டை வீட்டுச் சிறையில் வைக்க உத்தரவிட்ட எலிசபெத், அவரது மத அநுசாரங்களைப்பற்றி விசாரிக்கும்படி ஹான்சன் பிரபு என்பவரை நியமித்தார். இந்த ஹான்சன் பிலிப்பின் தந்தையான தாமஸ் ஹோவர்ட்டின் ஊழியராக இருந்தவர். எர்ல் குடும்பத்தைப் பகைத்தவர். எனவே மிகுந்த உற்சாகமடைந்த ஹான்சன் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த பிலிப்பிடம் மத சம்பந்தமான கேள்விகளைக் கேட்டார். அவரது அனைத்துக் கேள்விகளுக்கும் வெகு சாதுரியமாகப் பதிலளித்ததால் பிலிப் மேல் குற்றம் சாட்ட முடியாது போயிற்று. அதோடு எர்ல் குடும்பத்துக் காரியதரிசியான ஜாண் மோம் ஃபோர்டிடமிருந்தும் உறுதியான தகவல் கிட்டாததால் காவல் விலக்கிக்கொள்ளப்பட்டது.

### திருச்சபையோடு ஐக்கியம்!



பிலிப் ஹோவர்ட் பிரான்ஸ் நாட்டில் தூவே நகரில் இருக்கும் கர்தினால் ஆலனின் உதவியை நாட விரும்பினார். இங்கிலாந்தைச் சேர்ந்தவரான அவர் தமது நாட்டில் மீண்டும் கத்தோலிக்க வேதத்தை ஸ்தாபிக்க வேதபோதகக் குருக்களை உருவாக்கி, இங்கிலாந்திற்குள் அனுப்பிவந்தார் என்பது நாம் அறிந்ததே. கர்தினால் ஆலனுக்கு ஒரு கடிதத்தின் மூலம் "தாம் கத்தோலிக்க விசுவாசத்திற்காக உதவி விரும்புவதாகவும், அதற்கான வழிகளை தன்னால் அறியமுடியவில்லை என்றும், ஆகவே தம்மை வழிநடத்த வேண்டும்" என்று எழுதினார். ஆனால் அக்கடிதமானது எப்போதும் சந்தேகக் கண்கொண்டு சுற்றித்திரியும் அரசியின் ஒற்றர்களால் கைப்பற்றப்பட்டது. நயவஞ்சகமாய், "உடனே நாட்டைவிட்டு வெளியேறு" என்று கர்தினால் ஆலன் எழுதியதாக போலி பதில் கடிதம் பிலிப்பிற்கு கொடுக்கப்பட்டது. அதனால் குழப்பமடைந்த பிரபு பிலிப்பிற்கு இங்கிலாந்தின் சேசுசபை குருவான சங். வில்லியம் வெஸ்ட்சன் சுவாமி அறிமுகமானார். அவர் பிலிப் இங்கிலாந்திலேயே இருக்கும் படியும், அவரது மனமாற்றம் விசுவாசிகளுக்கு மிகவும் எடுத்துக்காட்டாக இருக்கும் என்றும், அதோடு அவரது செல்வாக்கினால் அரசியையும் திருச்சபையோடு மீண்டும் ஒப்புரவாக்க முயற்சிகளை மேற்கொள்ள வாய்ப்பாக அமையும் என்று கூறினார். அதோடு கத்தோலிக்கர் களுக்கு எதிரான அரசியின் தண்டனையையும் தடுக்க முடியும் என்று யோசனைக் கூறி வந்தார்.

ஆனாலும் நீண்ட அனுபவமும், மக்களால் போற்றப்பட்டு நாடு கடத்தப்பட்டிருக்கும் திருச்சபையின் அதிகாரியுமான கர்தினால் ஆலனின் கருத்துக்கு மாறாக ஆலோசனைக் கூற வெஸ்ட்சன் சுவாமி துணியவில்லை. ஆனால் பிலிப் ஹோவார்ட்டை திருச்சபையோடு மீண்டும் ஒப்புரவாக்கும் முயற்சியில் இறங்கினார். கத்தோலிக்க விசுவாசத்திற்கு மனந்திரும்பிய பிலிப் 1584!ம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையோடு ஐக்கியமானார். ஏற்கனவே கத்தோலிக்க ஞானஸ்நானம் பெற்றிருந்த பிலிப் சங். வெஸ்ட்சன் சுவாமியிடம் பாவசங்கீர்த்தனம் செய்து புது ஜீவியம் ஜீவிக்கத் துவங்கினார். சத்திய விசுவாசத்தை ஏற்றுக்கொண்டதால் தேவ இஷ்டப்பிரசாதத்தால் நிரம்பியவராக மனநிறைவை பெற்றார். தமது பழைய ஆடம்பர, தாறு மாறான வாழ்வுக்காக மனஸ்தாபப்பட்டு உத்தம கத்தோலிக்க வாழ்வு வாழ தலைப்பட்டார். தமக்கென்று குருவானவரை அமர்த்தி தமது அரண்மனையில் தினமும் திவ்விய பலிபூசை நிறைவேற்றச் செய்து உள்ளம் நெகிழ்ந்தார். தாழ்ச்சியோடு பூசைக்கு பீடபரிசாரகனாக உதவிசெய்து மகிழந்தார்.

### விரிக்கப்பட்ட வலை!

புண்ணிய கத்தோலிக்க வாழ்வில் பயின்றுவந்த பிரபு பிலிப்பின் நடத்தையில் பெரிய மாற்றத்தைக் கண்டுபிடித்த அவரது எதிரிகளும், அரசியின் ஒற்றர்களும் அவரைச் சிக்கவைக்க வலை விரித்தனர். கர்தினால் ஆலனின் போலியான கடிதத்தை பிலிப்புவிற்கு கொடுத்த, பகிரங்கமாக கத்.விசுவாசத்தை மறுதலித்த எட்வர்டு கிராட்லிய் என்ற குரு நயவஞ்சகமாக,

பிலிப்பு தப்பித்து நாடு கடந்து செல்ல ஏற்பாடு செய்வதாகக் கூறி நம்ப வைத்தான். அதே சமயம் அரசாங்கத்துக்கும் தகவல் கொடுத்து அவரைப் பிடிக்க சதிசெய்தான்.


ஆரம்பத்திலிருந்தே சதியில் பிறந்த ‘நாடு கடந்து செல்லவேண்டும்’ என்ற பிலிப்பின் திட்டம் தோல்வியில் முடி வடைந்தது. எப்படியெனில் நம்பிக்கையோடு தனது மனைவி அன்னாவிடம் விடைபெற்ற பிலிப், தமது கத். விசுவாசத்தையும், அரசியிடம் தாம் கொண்டுள்ள மரியாதையையும், கத்தோலிக்கர்களுக்கு எதிரான அவளது கலாபனையையும் எதிர்த்து ஒர் நீண்ட கடிதம் எழுதினார். அதனை தமது தங்கை சீமாட்டி மார்க்கரெட்டிடம் கொடுத்து தாம் பிரான்ஸ் சென்ற பின்பு அரசிக்கு அனுப்பிவைக்கும்படியாக கேட்டுக்கொண்டார். தமது இரு உதவியாளர்களோடு ஹாம்ஷரில் லிமிஸ்க்டன் என்ற தனியார் துறைமுகத்தில் கப்பலை அமர்த்தி அதன் பயணத்துக்காகக் காத்திருந்தார். எப்படியாவது பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றுவிட வேண்டும், அங்கே உத்தம கத்தோலிக்க வாழ்வு வாழவேண்டும், கர்தினால் ஆலனோடு சேர்ந்து இங்கிலாந்து மீண்டும் தமது சத்திய விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள உழைக்க வேண்டும் என்ற ஆவல் அவர் உள்ளத்தை நிறைத்தது. இரண்டு முறை காற்று சாதகமாக இல்லை என்று அறிவிக்கப்பட அவர் நொந்துபோனார்.

இதற்கிடையில் கப்பல் தலைவன் அவர் பயணம் செய்யும் கப்பலின் அடையாளத்திற்காக விளக்கைக் கட்டித் தொங்கவிட்டான். கபடமாய் அரசியின் ஆட்கள் வந்து சேரும் வரைக்கும் சாக்குப்போக்கு கூறி தாமதப்படுத்தினான். பின்னர் பிரபு பிலிப்பையும், அவரது இரு உதவியாளர்களையும் கப்பலில் அமரச் செய்து, விளக்கால் சைகைக் காட்டினான் கப்பல் தலைவன். நடக்கும் சதியை உணராத பிலிப், சற்று நேரத்தில் தாங்கள் வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டதைக் கண்டு திடுக்கிட்டுப்போனார். அவர்களின் தலைவனான கெல்லோவே என்பவன் பிலிப்பிற்கு ஏற்கனவே அறிமுகமான கேடி எனப் பெயரெடுத்தவன். அவன் பிலிப்பின் கப்பலை விடுவிக்க வேண்டுமென்றால் தமக்கு 100 பவுண்ட் பணம் தரவேண்டும் என்று கேட்டான். இங்கிலாந்திலிருக்கும் அவருடைய உறவினர்களிடம்வாங்கிக்கொள்ள அனுமதி கடிதம் எழுதித் தரவேண்டு மென்று வஞ்சகமாய் கேட்டான். பிலிப்பும் தான் பிரான்சுக்கு செல்லவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் இருந்ததால் சிறிதும் யோசிக்காமல் தமது சகோதரி சீமாட்டி மார்க்கரெட்டிற்கு, தமது கடிதத்தைக் கொண்டு வருபவர்க்கு திரு. பிரிட்ஜஸிடம் கூறி 100 பவுண்ட் பணத்தைக் கொடுக்கும்படி எழுதி கொடுத்தார். கடிதமாகிய ‘எழுத்துப்பிடி’ தமது கைக்கு வந்த உடனேயே கெல்லோவே தாம் அரசியின் ஒற்றன் என்று அறிவித்தான். திருடனான அவன் பிலிப்பிடம் இருந்த பணம், நகைகள் அனைத் தையும் பறிமுதல் செய்து அவரைக் கைது செய்தான். மறுநாள் லண்டன் நகருக்குக் கொண்டுசெல்லப்பட்டு 1585 ஏப்ரல் 25!ம் நாளன்று லண்டன் டவர் சிறைச்சாலையில் பிலிப் எர்ல் பிரபு அடைக்கப்பட்டார்!

சிறையில் அடைக்கப்பட்ட பிரபு பிலிப்பை சந்திக்க அவரது உறவினர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. அவர் சிறைபிடிக்கப்பட்ட உடனேயே அரசியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் இரண்டு முறை விசாரித்தனர். ஒவ் வொரு முறையும் தமது கத்தோலிக்க விசுவாசத்தையும், அரசியின் மீதும், இங்கிலாந்து நாட்டின் மீதும் தாம் கொண்டிருக்கும் மரியாதையையும் அறிவித்த பிலிப், தாம் தமது ஆன்மாவை காத்துக்கொள்ளவே, நாட்டைவிட்டு வெளியேற விரும்பிய தாகவும், தமக்கு எந்த ஒரு அரசியல் நோக்கம் இல்லையெனவும் பதிலளித்தார்.

## கடுமையான சிறைவாசம்!

இறுதியாக அரசியின் நீதிமன்றம் அவர் கத்தோலிக்க விசுவாசத் தைக் கொண்டிருப்பதாலும், அரசியின் உத்தரவில்லாமல் நாட்டைவிட்டு வெளியேற முயன்றதாலும், “தேசத்துரோகி”யான கர்தினால் ஆலனோடு கடிதத் தொடர்பு கொண்டதாலும் அவருக்கு 10 ஆயிரம் பவுண்ட் பணம் அபராதமும், அரசி விரும்புகிற வரையிலும் சிறைவாசமும் விதித்துத் தீர்ப்பிட்டது. மீண்டும் டவர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பிரபு பிலிப்பை இடைவிடாமல் கண்காணிக்க அதிகாரியாக லெப்டினென்ட் ஓவன் ஹாப்கின்ஸ் என்பவனை அரசி நியமித்தாள். சூரிய வெளிச்சம் புகாத தனி அறையில் 1585 ஏப்ரல் முதல் 1586 மே வரையிலான முதல் 13 மாதங்கள் எந்தவிதமான உதவியாட்களும் இல்லாமல் வைக்கப்பட் டார். செல்வ செழிப்போடு உதவியாட்கள் புடைசூழ ஆடம்பர வாழ்வு வாழ்ந்து வந்த எர்ல் குடும்பத்துப் பிரபு பிலிப் ஹோவார்ட் தாம் கொண்ட கத். விசுவாசத்திற்காக தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார் அதுவே அவருக்கு மிகுந்த கொடுமையாக இருந்தது. 13 மாதங்களுக்குப் பின்னர் 2 வேலையாட்களை உடன் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். இந்த இரு வேலையாட்களுக்கும் கெடுபிடிகள் அதிகமாக இருந்ததால் அவர்களும் தங்கள் எஜமானருடன் கைதியாக அந்த தனியறையில் அடைப்பட்டுவிட நேர்ந்தது. அவர்கள் விரைவில் நோய்வாய்ப்படவே அவர்களும் விடுவிக்கப்பட்டார்கள்.




கிறீஸ்துநாதருக்காக இவ்வுலகில் எவ்வளவு அதிக துன்ப துரிதங்கள் அனுபவிக்கப்படுகிறதோ, அவ்வளவிற்கு மறுவுலகில் கிறீஸ்துநாதரோடு மகிமையடையலாம்.

பிரபு பிலிப்பின் உள்ளத்தை அறிந்த அரசி கடுமையான சிறைவாசத்தால் மனம் மாறுவார் என்று எதிர்பார்த்தாள். ஆடம்பரத்தை விரும்பும் பிலிப் விரைவில் தமது விருப்பத்திற்கேற்ப கத். விசுவாசத்தை வெளிப்படையாக மறுதலித்து, புராட்ட ஸ்டாண்ட் ஆலயத்திற்கு வந்து வழிபாட்டில் பங்கேற்க வருவார் என்று எதிர்பார்த்தாள். ஆனால் ஏமாற்றமடைந்தாள்.

(தொடரும்)

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (19) ஞானத்திற்கு இருப்பிடமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஞானமே உருவான ! தேவனை பத்து மாதம் தன் உதரத்தில் தாங்கியவர்கள் மரியன்னை. ஞானத்துக்கும் ஊற்றுக்கும் ஊறணியுமான தேவன் அவர்களிடமாய் பிறக்கச் சித்தமானார். இதன் காரணமாகத்தான் தாய் திருச்சபை தேவ அன்னையை ஞானத்திற்கு இருப்பிடமே என்று வாழ்த்துகிறது.

**ஞானம் என்றால் என்ன ?**

இவ்வுலக காரியங்களை அறவே வெறுத்துத் தள்ள, பரலோகத்துக்கடுத்த காரியங்களை ஆர்வமுடன் நாடிச் சுகிக்க நமக்கு அருளப்படும் தேவ வரமே ஞானமாகும். நமது தேவ அன்னையின் ஆத்துமத்தை அலங்கரித்த தேவவரங்களில் இதுவும் ஒன்று. ஞானம் மாதாவிடம் ஒப்பற்ற விதமாய்ப் பொலிந்து விளங்கியது. படைக்கப்பட்ட சிருஷ்டிகளுக்குள்ளே, மரியன்னையைப் போல் ஞானத்தில் மிகவுயர்ந்த வேறொரு சிருஷ்டியைக் கடவுள் படைக்கவில்லை.



உந்நத சிறப்பு வாய்ந்த இவ்வரத்தின் உதவியால் தேவ அன்னை இறைவனுக்கு உகந்தவை எவையெனவும், பிரியமில்லாதவை எவையெனவும் தெளிவுற அறிந்து, தனது மனம், வாக்கு, கிரியைகள் யாவற்றையும் இறைவன் மீது செலுத்தலானார்கள். வானத்தை ஒட்டி உயரே பறக்கும் பருந்தைப் போல அன்னையின் உள்ளமும் எப்போதும் பரலோகத்திலேயே சஞ்சரித்தது. அவர்களது வாயிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு சொல்லும் தேவ அன்பில் தோய்ந்திருந்தது. மேலும் தாம் செய்த ஒவ்வொரு கிரியையையும் சர்வேசுரனுக்காக, அவரைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் செய்தார்கள்

**ஞானத்தின் குணங்கள் !**

பரலோக ஞானத்தின் குணங்கள் ஏழு என்று அர்ச். யாகப்பர் உரைக்கிறார்: உன்னதத்திலிருந்து வருகிற ஞானமோ முந்தமுந்தக் கற்புள்ளதும், பின்னும் சமாதானமுள்ளதும், மரியாதையுள்ளதும், இணக்கமுள்ளதும், நல்லவைகளுக்கு உடந்தையுள்ளதும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததுமாயிருக்கின்றது. அது யாதொன்றுக்கும் தீர்ப்பிடுகிறதுமில்லை, பாசாங்கு பண்ணுகிறதுமில்லை (இயாக. 3:17). தேவ அன்னையின் ஞானம் இவ்வேழு குணங்களையும் கொண்டிருந்தது. அன்றியும் பரலோக ஞானம் படோபடமற்றது; தேவமாதாவின் ஆடம்பரமற்ற, எளிய, மறைந்த ஜீவியம் இவ்வுண்மையை வலியுறுத்துகிறது.

**படத்தின் விளக்கம்**

ஞானத்திற்கு இருப்பிடம் என்பது சாலமோன் இராஜாவின் அரியணையைக் குறிக்கும். மரியாய், பொன்னாலும், தந்தத்தாலும் செய்யப்பட்ட சாலமோனின் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது போல் குறிக்கப்பட்டுள்ளது. சாலமோனின் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் அவர்களிடமாய் ஞானத்திற்கு பிதாவான அவர்களது குமாரன் அமர்ந்திருக்கிறார்.

படத்தில் தாயையும், குழந்தை சேசுவை சுற்றிலும் உலக ஞானமாகிய அறிவியல் மற்றும் அறிவின் அடையாளங்களான பூமி உருண்டை, தொலைநோக்கி செவ்வகம் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. படத்தின் கீழ்ப்பகுதியில் "Verbum" வார்த்தை" என்று பொறிக்கப்பட்டுள்ளது. அரியணையைச் சுற்றிலும் நின்றவண்ணமுள்ள 7 பெண் உருவங்கள் உள்ளன. சாலமோனின் அரியணை மனிதருடையதல்ல, மறுவுருவெடுத்த சர்வேசுரனின் வார்த்தையாகிய தெய்வீக ஞானமானவருடையது. தேவதாய் மற்றும் குழந்தை சேசுவை சுற்றிலும் தாயின் உதரத்தில் சர்வேசுரனின் ஞானம் அமர்ந்துள்ளது என்று பொறிக்கப்பட்டுள்ளது.

மேலும் வரைபடத்தில் ஞானமானது தனக்கோர் வீட்டைக்கட்டி, ஏழு தூண்களையும் அறுத்து நிறுத்தியது (பழ. 9:1). அதில் வரையப்பட்டுள்ள '7' பெண் உருவங்கள் அறிவு மற்றும் ஞானத்தையே குறிக்கிறது என்றும்; அவை '7' தேவ மற்றும் தலையாய புண்ணியங்களையோ அல்லது இஸ்பிரீத்துசாந்துவின் 7 கொடைகளையோ குறிக்கிறது என்றும் மற்றொரு விளக்கம் கூறுகிறது.

**"ஞானத்திற்கு இருப்பிடமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"**

# ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழி!

(அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாள் காட்டிய ஞான குழந்தைத்துவம் (Spiritual Childhood) என்ற சிறிய வழியைப் பற்றிய விளக்கம். அர்ச். தெரேசம்மாளையும், அவளது சொந்த சகோதரிகளையும் நன்கு அறிந்தவரான சங். மார்டின் சுவாமி என்பவர் எழுதிய "The Little way of Spiritual Childhood" என்ற நூலின் தமிழாக்கம். ஆர்.)

**மூன்றாம் அத்தியாயம்**

**தரித்திரம்**

ஞான குழந்தைத்துவத்தின் இரண்டாவது பண்பு தரித்திரம் ! ஒன்றுமில்லாமையாகும். ஞான தரித்திரம் அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாளின் கண்களுக்கு மிக முக்கிய மானதாக இருந்தது. அதைச் சிறிய ஆன்மாக்களின் இதயங் களில் முதல் இடத்தில் குறித்துவைத்தாள். இயற்கையும்கூட அதை அப்படித்தான் கொண்டிருக்கிறது. வசதி படைத்த குடும்பத்தில்கூட, சிறு குழந்தை தனக்கென்று ஒன்றையும் கொண்டிருப்பதில்லை. அனைத்தும் பெற்றோர்களுக்குச் சொந்தமானதாக இருக்கிறது. அவர்களே அக்குழந்தையின் தேவைக்கேற்ப அவைகளை வழங்குகிறார்கள். இக்குழந்தை யைப் போல சிறிய வழியில் நடக்க விரும்பும் ஆன்மா தனக்கென்று எதையும் வைத்திருப்பதில்லை என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கவேண்டும். மனத்தரித்திரம் ஒரு ஆன்மாவை எல்லாவற்றிற்கும் நல்ல சர்வேசுரனையே எதிர்பார்த்திருக்கச் செய்து, எக்குறையும் இல்லாமல் இருக்கச் செய்கிறது.

**மனத்தரித்திரம் ஆன்மாவை தனது எல்லாத் தேவைகளிலும் நல்ல கடவுளையே எதிர்நோக்கச் செய்கிறது:**

நாம் எந்தக் குறைவும் ! தேவையும் இல்லாமல் இருக் கச்செய்வதற்கு மனத்தரித்திரம் ஒரு நிச்சயமான வழி என்பது அர்ச். தெரேசம்மாளின் கருத்து. ஏழைகளிடம் காணப்படும் நிலையைக் கொண்டு அவள் இம்முடிவுக்கு வந்துள்ளாள் என்று கூறலாம். அவள் கூறுகிறாள்: ஏழைக் குடும்பத்தில் முதலாய், குழந்தைக்கு அவசியமாகத் தேவைப்படுவதை அதன் பெற்றோர் அதற்குத் தருகிறார்கள். குழந்தை வளர்ந்து வாலி பத்தை எட்டிய பிறகு, தகப்பன் அந்த இளைஞனைப் பார்த்து "நீ வளர்ந்து விட்டாய். இப்போது வேலை செய்து பிழைத் துக்கொள்" என்று கூறி அனுப்பிவிடுவார். இந்த வார்த்தை களைக் கேட்காமல் தப்பித்துக்கொள்வதற்காகவே நான் எப் பொழுதும் பெற்றோரைச் சார்ந்திருக்கும் சிறுபிள்ளையாய் இருக்க விரும்புகிறேன். நான் தனியாக ! தனியாளாக இருந்து கொண்டு என் ஜீவியத்திற்கு ! நித்திய ஜீவியத்திற்கு (இரட் சண்யத்திற்கு) தேவையானவைகளை சம்பாதித்துக்கொள்ள இயலாதவளாய் இருக்கிறேன். ஆகவேதான், நான் எப்பொ ழுதும் சிறியவளாய் இருக்க விரும்புகிறேன். மிகச் சிறியவ ளாய் இருந்துகொண்டு நேசத்தினுடையவும், பரித்தியாகத்தி னுடையவும் மலர்களைச் சேகரிப்பதிலும், அவைகளை, நல்ல சர்வேசுரனை மகிழ்விப்பதற்காக காணிக்கையாக ஒப்புக்கொடுப் பதும் தவிர வேறெதையும் நான் செய்ய விரும்புகிறேன்.

இதைவிட மேலாகவோ அல்லது அதிக அன்புடனோ, ஞானத்துடனோ எவரேனும் சிந்திக்க முடியாது. தேவ பரா மரிப்பை மட்டுமே சார்ந்துள்ள குழந்தை தன்னுடைய பர லோகத் தந்தையைப் பார்த்து "நான் பலமற்றவன். நீரே என் னுடைய பலமாய் இரும்" என்றும், சற்றுப் பின்பு, "என்னிடம் ஒன்றும் இல்லை. நீரே என் செல்வமாய் இரும்" என்றும் சொல்லும்போது இப்படி செல்வங்களையும், நன்மைத்தனத் தையும் அபரிமிதமாகக் கொண்டிருக்கிற ஆண்டவரும், சர்வேசுரனுமாயிருக்கிற நல்ல பிதா எப்படி தன்னைச் சார்ந் துள்ள அக்குழந்தையைக் கைவிட்டுவிடுவார்? தெய்வீக நன்மைத்தனத்திலிருந்து வெகு தூரத்தில் இருக்கிற இவ்வுலகத் தந்தையர்கள் தங்களுடைய சிறிய குழந்தைகளின் சிறிய விருப்பங்களையும், தேவைகளையும் முதலாய் நிறைவேற்று வதில் ஆனந்தம் கொண்டிருக்க, நம்மைச் சிருஷ்டித்தவரான பரலோகத் தந்தை எப்படி இவைகளைச் செய்யாது விடுவார்?

அதே போல, தன்னுடைய வறிய, தரித்திர நிலையை அறிந்திருக்கிற ஒரு ஆன்மா, தான் புண்ணியமற்ற, தைரிய மற்ற நன்மை செய்யத் திராணியற்று, சிறு சோதனைகளை முதலாய் தள்ளிவிட சக்தியற்று, தன்னுடைய நிலையை ஒப்புக் கொள்கிற ஆன்மா; செய்யவேண்டியதெல்லாம்; குறைகளை எல்லாம் நிவர்த்திசெய்து ஈடு செய்கிற நன் மைத்தனங்களைக் கொண்டிருக்கிற சர்வேசுரனிடம் நம்பிக் கையுடன் தஞ்சம் புகுவதே! இதயத்திலிருந்து எழும் ஒரு கூக்குரல், ஒரு வார்த்தை, ஒரு சைகை, ஒரு பார்வை போன்ற எளிய ஜெபம் மட்டுமே போதுமானது. பரலோக உந்நதத்தி லிருந்து பிதா, இச் சிறிய ஆன்மாவின் சிறிய தாழ்மையான செயல்களை நேசத்துடன் நோக்கி அதற்கு உதவ முன்வருவார்.

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், அந்தக் குழந்தை எதுவும் குறைவில்லாமல் பெற்றுக்கொள்வதற்கான நிச்சயமான வழி என்னவென்றால், எதையும் கொண்டிருக் காமல் அனைத்தையும் சர்வேசுரனிடமிருந்தே எதிர்பார்த் திருப்பதுதான்.

(தொடரும்)

# ஒரு குருமாணவரின் நினைவுக் குறிப்பு...!

வினோனோ
ஆகஸ்ட் 10, 2009

லூர்து நகருக்கு அடுத்தபடியாக அநேக புதுமைகள் நிகழும் இடம் லிசியே என்றால் மிகையாகாது. இதனை நான் சமீபத்தில் தான் அறிந்துகொண்டேன். சில வாரங்களுக்கு முன் அங்கே சென்றிருந்த போது அங்குள்ள கார்மெல் மடத்தில் 94 வயது நிரம்பிய சகோதரி சங். மேரி பெர்த் (Sr. Mary Berthe) என்ற வயது முதிர்ந்த கன்னியரைச் சந்தித்தேன். அவர் அந்த கார்மெல் மடத்தில் மட்டுமே தன்னுடைய வாழ்நாளில் 70 ஆண்டுகளை செலவழித்துள்ளார். அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் உடன்பிறந்த சகோதரிகளை நன்கு அறிவார். அவர் என்னிடம் கூறிய சில துணுக்கு செய்திகளை வியப்புடன் கேட்டேன். அவரை சந்தித்ததன் நினைவாக சிறிய புத்தகம் ஒன்றை என்னிடம் அளித்தார். நன்றியோடு வாங்கிக்கொண்டு புன்னகையோடு வெளியேறினேன். “அர்ச். குழந்தை தெரசம்மாளும் அவருடைய குருத்துவ நண்பர்களும்” என்ற தலைப்பு கொண்ட அந்த புத்தகத்தை மெதுவாக புரட்டிப் பார்த்தேன். அதில் இடம்பெற்றிருந்த பல பெயர்களில் Fr. Vernon Johnson என்ற ஒரு பெயர் என்னை வியக்கச் செய்தது. இவர் எழுதிய புத்தகங்கள் ஏற்கனவே எனக்கு அறிமுகமானவை. இவருக்கும் லிசியேவிற்கும் என்ன தொடர்பு என்று வியப்புடன் ஆராய தொடங்கினேன்... அறிய தொடங்கினேன்!



1886!ல் Fr. Vernon Johnson இங்கிலாந்தில் உள்ள ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்தார். பிறப்பிலிருந்தே பதித புரொட்டஸ்டாண்ட் மதத்தில் வளர்க்கப்பட்ட இவர் கல்லூரியில் கற்று முடிந்த தருவாயில் புரொட்டஸ்டாண்ட் குருமடம் புகுந்தார். பின் 1910!ம் ஆண்டு குருபட்டமும் பெற்றார். தன்னுடைய முதல் பணியாய் இங்கிலாந்தின் கடற்கரை கிராமம் ஒன்றில் நியமிக்கப்பட்டார். பணியில் ஒரு பிடிப்பும் இல்லாமல் ‘நீர்வழிப் படூஉம் புனை போல’ போகும் இடம் புரியாமல் போய் கொண்டிருக்கும் நிலை அவருக்கு பிடிக்கவில்லை. “கிறீஸ்துவுக்காக அர்ச்சிக்கப்பட்ட வாழ்வில் நான் சிலுவைகளை கண்டுபிடிக்க முடியவில்லை” என்று தமது இந்த நிலையை பிற்காலத்தில் குறிப்பிட்டார். எனவே அவர் தனது பணியை உதறிவிட்டு அருகிலிருந்த நகரத்திற்கு குடி புகுந்தார். 1914!ம் ஆண்டு முதலாம் உலகப்போரின் காலம். ஜெர்மானிய போர் விமானங்கள் அவர் இருந்த நகரத்தை நரகமாக மாற்றியது. இடிபாடுகளுக்கிடையே சிக்கித் தவிக்கும் மக்களை காப்பாற்ற அவர் முழுமூச்சுடன் இறங்கினார். அப்போது அவர் காட்டிய பிறர் சிநேகம் பலரை வியக்க வைத்தது.

1924!ல் ஒரு தியானத்திற்காக அவர் சென்றிருந்தபோது அங்கேயுள்ள ஒரு கத்தோலிக்க பணிப்பெண் அவரை அணுகி புத்தகம் ஒன்றை அவருக்கு அளித்தாள். ‘ஓர் ஆன்மாவின் வரலாறு’ என்பது அதன் தலைப்பு!! தலைப்பை பார்த்தவுடனே “நன்றி! ஆனால் இதை நான் வாசிக்கப்போவதில்லை. ஏனென்றால் முதலில் இது ஒரு பிரெஞ்சு மொழி புத்தகம். இரண்டாவது இது கத்தோலிக்க புத்தகம்” என்றார். “அதனால் என்ன? வாசியுங்கள்” என்று கூறி புத்தகத்தை அவர் கையிலே விட்டுவிட்டு அப்பெண்மணி வெளியேறினாள்.

வெகு சில பக்கங்களை வாசித்த பின், இதெல்லாம் வயதான பக்திமான்களுக்கு எழுதப்பட்ட நூல் என்று வெறுப்புடன் வாசிப்பதை நிறுத்தினார். அன்றிரவு தூக்கம் வராத காரணத்தினால் மீண்டும் வாசிக்கத் தொடங்கினார். இவ்வளவு சின்ன வயதில் பெரிய புனிதையா? என்று வியப்புடன் இரவு முழுவதுமாக வாசித்தார். இரவு அகல அகல அவருடைய இருளும் அகன்றது. இத்தகைய மாபெரும் புனிதையை எச்சபை உருவாக்குமோ அச்சபையே மெய்யான சபை என்ற முடிவுக்கு வந்தார். சூரியன் அழகாய் விடிந்தது. அவருக்கும் புதிய நாளாக விடிந்தது!

சில நாட்களுக்குப் பின் லிசியே நகருக்கு திருயாத்திரை மேற்கொண்டார். அர்ச். தெரசம்மாள் வாழ்ந்த இடங்கள் ஒவ்வொன்றாய் சென்று பார்த்தார். கார்மெல் மடம் சென்று அங்குள்ள மடத்து தலைவியிடம் (அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் உடன்பிறந்த அக்காள் சங்.மேரி ஆக்னஸ் தாயார் ! Sr. Mary of Agnes - Paulin Martin) தனக்காக வேண்டிக்கொள்ளுமாறு கண்ணீருடன் கேட்டுக்கொண்டார். இங்கிலாந்து திரும்பியவுடன் திருச்சபையை அணுகி ஞான ஸ்நானம் பெற்றுக்கொண்டார்.


...தொடர்ச்சி 14!ம் பக்கம் காண்க


# நீ ஏன் பாவசங்கீர்த்தனம் செய்வதில்லை? தொடர்ச்சி...



பச்சாத்தாபமின்மையாலும், வீண் கூச்சத்தாலும் சிலர் பாவசங்கீர்த்தனம் பண்ணாமல் நாளைக் கடத்திக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னோம். ஆனால் அநேகர் பாவசங்கீர்த்தனம் செய்யாதிருப்பதற்கு முக்கிய காரணம், அலட்சியமே. இந்த அலட்சியம் எத்துணை ஆபத்துக்குரியது என்பதை இவர்கள் யோசிப்பதில்லை. நமது ஆத்துமநன்மை, நித்திய இரட்சண்யம், ஞான அபிவிருத்தி ஆகிய மகத்தான விஷயங்களில் அலட்சியமா யிருக்கலாமா? தொத்து நோய், கொள்ளை நோய் எனக்கு வரக்கூடியதைப் பற்றி, எனக்கு அக்கறையில்லை என்று எவனாவது சொல்வானா? எனது ஆடையைப்பற்றி சிறிதும் நான் கவனிப்பதில்லை என்று எந்த ஸ்திரீயும் சொல்வாளா? நமது சரீர சௌக்கியத்தைப்பற்றியும், அதன் அழகைப் பற்றியும் வெகுவாய்க் கவலைப்படுகிற நாம் நமது ஆத்துமத்தைப் பாவநோய்க்கு ஆளாக்கி, அதைக் கந்தைகளால் உடுத்திச் சர்வேசுரன் சமுகத்தில் அவலட்சணம் நிறைந்ததாக்க அஞ்சுகிறோமில்லை. ஆத்தும விஷயத்தில் நமக்குள்ள அலட்சியம், வியாபார விஷயத்தில் இருக்குமாகில், அவ்வித அலட்சியமுள்ள வியாபாரி ஒரு மாதத்திற்குள் கடன்காரனாகிக் கஷ்டநிலையை அடைவான் என்பது நிச்சயம். நமது ஆத்துமத்தின் மட்டில் அலட்சியமாயிருக்கிற அளவு, சரீரத்தின்மட்டில் இருந்தால், வெகு சீக்கிரம் நோய் வாய்ப்பட்டு நொந்து வாடுவோம் என்பதற்குச் சந்தேகமில்லை. வருஷக்கணக்காய் உடம்பில் தண்ணீர்படா மலும், தேய்த்துக் குளிக்காமலும் இருப்பவனிடமிருந்து எழும்பும் துர்நாற்றம் எப்படியிருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. ஒரு நாட் கழுவாவிடில் அழுக்கு மிகத்திரண்டு புழுத்து நாறும் என்று பாடியிருக்கிறார் வேதநாயகம் பிள்ளை. நீ நாள்தோறும் புரிந்துவருகிற தீவினைகளால் உன் ஆத்துமம் அழுக்கடைந்து துர்நாற்றம் வீசுவது உனக்குத் தெரியவில்லையாக்கும். ஆனால், சரீர துர்நாற்றம் உன் மூக்கைத் துளைத்துக்கொண்டு போகிறதை அறிவாய். ஆத்தும அவலட்சணம் சர்வேசுரனுக்கு எவ்வளவு அருவருப்பானது என்று நாம் சொல்லுந்தன்மையல்ல. இறுதியாய், சொன்ன விக்கினங்களெல்லாம் மெய்யான விக்கினங்களல்ல, சாக்குப்போக்குதான் என்று முடிக்க வேண்டும். ஏனெனில், பச்சாத்தாபப்பட மனமில்லாதவன் வைத்தியனைத் தேடப் பிரியமில்லாத வியாதியஸ்தனுக்குச் சமானம்; இத்தகைய வியாதியஸ்தன் சுத்த மடையன் என்போமல்லவா? ஓர் முதலாளியை அண்டி பணம் சம்பாதிக்கவேண்டியவன், நான் அவரிடம் போக மாட்டேன், அவர் கண்டிப்புக்காரர் என்று கேள்விப் படுகிறேன் என்று சொல்லி போகாமலிருந்தால், அவனைப் புத்திகெட்டவன் என்று அழைப்போமல்லவா? தனது வீட்டுக் காரியங்களைப் பற்றி அலட்சியமாயிருக்கிற கணவன் மனைவியரை என்னென்போம்?


பாவசங்கீர்த்தனத்தை அலட்சியஞ்செய்வதால், மனச்சமாதானம் ஏற்படுமாகில், இந்த சாக்குபோக்குகளை ஒருவாறு நியாயமென ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அதற்கு மாறாய் எவ்வளவுகாலம் அலட்சியமாயிருக்கிறோமோ அவ்வளவுக்கும் மனச்சஞ்சலம் அதிகரித்துக் கொண்டே போகிறது. நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்கிறவர்களுக்கு, அதனால் விளையும் மனச் சமாதானத்தின் மதிப்புத் தெரியும். இது பரலோக சமாதானம், மனித வர்ணனைக்கு எட்டாத சமாதானம். சம்மனசுகளுக்கும், அர்ச்சிய சிஷ்டவர்களுக்கும் மாத்திரமல்ல, உனக்கே சந்தோஷத்தை வருவித்துக்கொள்வதற்கான தேவதிரவிய அநுமானத்தை வேண்டாமென்று சொல்லிக்கொண்டிருப்பது முழுப் பைத்தியமல்லவா? ஆரம்பத்தில் குறிப்பிட்ட வயோதிகன் ஐயோ இவ்வளவு காலம் ஏன் தாமதஞ் செய்தேன் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, கோவிலைவிட்டு வெளியேறினான். நீ ஏன் இவ்வளவு காலமும் தாமதித்துக் கொண்டிருக்கிறாய்?






# அர்ச். கிளாரம்மாள் சரிதை

31. பிரான்சிஸூம், கிளாராவும் தேவ சிநேகத்தால் பற்றியெறிந்தவர்களாய் ஜெபத்தில் ஆழ்ந்தனர். என்ன ஆச்சரியம்! ஒரு பெரிய பிரகாசமான ஒளி அவர்களைச் சூழ்ந்து ஒளிர்வித்தது! அந்த ஒளியின் பிரகாசம் எந்த அளவிற்கு இருந்ததென்றால், மடத்துக்கு அருகாமையிலுள்ள கிராமத்தின் மக்கள் அந்த ஒளியைக் கண்டு ஏதோ மடம்தான் தீப்பற்றிகொண்டுவிட்டது என்று பதறி ஓடி வந்தனர். ஆனால் அங்கே ஜெபப் பரவசத்தில் ஆழ்ந்து போயிருந்த பிரான்சிஸையும், கிளாராவையும் கண்டு வியந்து சர்வேசுரனுக்கு நன்றி செலுத்தினார்கள்.








32. பின் கிளாரா தன் மடத்துக்குத் திரும்பினாள்.பிரான்சிஸோ சுற்றிலுமுள்ள நகரங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தார். ‘‘மனந்திரும்புங்கள், தவம் செய்யுங்கள் சுவிசேஷத்தை நம்புங்கள்’’ என்று பிரசங்கம் செய்தார். பின்னர் நீண்ட நாட்களுக்குப் பிறகு, அசிசிக்குத் திரும்பியவர் கிளாராவின் மடத்திற்கு வருகை தந்தார். அது கடுமையான குளிர்காலமாய் இருந்தது. அதனைச் சுட்டிக்காட்டி ‘‘இந்த ஆண்டு கடுமையான பனிபொழிவு உள்ளது! மரங்கள்கூட காய்ந்துவிட்டது. அதோ அந்த ரோஜா செடிகள் உலர்ந்து உதிர்ந்து விட்டனவே. எனவே நான், இன்னொரு நாள் அந்த ரோஜா செடிகள் பூக்கும் காலத்தில் மீண்டும் வருகிறேன்’’ என்று கூறி மடத்தைவிட்டு வெளியேற எத்தனித்தார்.




33. என்ன அதிசயம்! உடனே அந்த பனியில் காய்ந்து வெம்பிபோன செடிகள் வசந்த காலத்தைப்போல பூத்துக் குலுங்கியது! வரண்ட செடிகளில் இப்போது அற்புதமாக ரோஜா மலர்கள் மலர்ந்து மணம் வீசுவதைக் கண்டு வியந்த பிரான்சிஸ், கிளாராவிடம் ''சகோதரி சர்வேசுரன் உம்மை மிகவும் நேசிக்கிறார். உமது ஜெபங்களை கேட்கிறார். இந்த ரோஜாக்கள் உண்மையிலேயே புதுமையல்லவா?'' என்று கூறினார்.




34. ஒரு சமயம் மடத்தில் உணவு தயாரிக்க தேவையான எண்ணெய் தீர்ந்துபோனது. இதை அறிந்த கிளாரா ஒரு பெரிய ஜாடியை நன்றாக கழுவி, துடைத்தாள். பின் சமையல் பொறுப்பை வகிக்கும் சகோதரியிடம் ''சகோதரர் பென்டிய்வென்கா நமது மடத்துப் பக்கமாய் வரும்பொழுது, அவரிடம் இதைக் கொடுத்து கொஞ்சம் எண்ணெயை யாசகம் பெற்றுவரும்படியாகக் கேளுங்கள்'' என்று கூறிக் கொடுத்தாள்.



35. சகோதரர் பென்டிய்! வென்கா வந்தார். அவரும் ஊருக்குள் சென்று எண்ணெயை யாசகம் கேட்பதற்காக ஜாடியை தூக்கினார். என்ன அதிசயம்! ஜாடி நிறைய ததும்பிய அளவுக்கு எண்ணெய் இருந்தது! இதனால் ஏமாற்றம் அடைந்த துறவி சகோதரியிடம் ''ஆஹா! என்னைக் கேலி செய்கிறீர்களா? நிறைய எண்ணெயை வைத்துக் கொண்டு இல்லை என்கிறீர்களா?'' என்று தீவிரமாகக் கேட்டார். ஜாடி நிறைய எண்ணெயைக் கண்ட சகோதரி ''இல்லை. சகோதரரே நம்புங்கள். அதில் ஒரு துளி எண்ணெய்கூட இல்லை. இது கிளாரம்மாளின் ஜெபத்தின் புதுமையாக இருக்கவேண்டும் என்று வியப்புடன் கூறினாள். ஆம்! கிளாராவின் மன்றாட்டினால் சர்வேசுரன் அந்த புதுமையை நிகழ்த்தினார்.




36. பிரான்சிஸ் வெர்னா மலை முகட்டில் அடர்ந்த காட் டின் அமைதியில் ஜெபத்தியானத்தில் ஆழ்ந்து வந்தார். அங்கே சர்வேசுரனோடு ஐக்கியத்தில் நிலைத்திருந்த அவர் சேசுவின் பாடுகளைத் தியானித்து வந்தார். சிலுவையில் அறையப்பட்ட வண்ணமாக சேசு தோன்ற அவருடன் பிரான்சிஸ் அந்நியோன்னிய உரையாடினார்.







37. ஒருநாள் நமதாண்டவரின் காயங்களைக் குறித்து ஜெப தியானத்தில் பிரான்சிஸ் ஆழ்ந்திருக்கும்போது சேசுவின் ஐந்து காயங்கள் அவரது உடலில் புதுமையாக பதிந்தன. கைகள், பாதங்கள், விலாவில் என தமது உடலில் நம தாண்டவரின் ஐந்து திருக்காயங்களைத் தாங்கியவராக அம்மலையைவிட்டு இறங்கினார். ஆண்டவரின் பாடுகளில் இவ்விதமாக பங்கு பெற்றுவரும் பிரான்சிஸ், கிளாரம்மாள் மடத்திற்கு ஒருநாள் வந்தார்.




38. வந்த இடத்தில் அவர் கடுமையாக நோய் வாய்ப்பட்டார். பின் கிளாரா இலைகளினால் அமைத்திருந்த குடிசை ஒன்றில் தங்கி ஓய் வெடுத்தார். தான் அனுபவித்துக் கொண்டிருந்த அவஸ்தையிலும் பிரான்சிஸ் கிளாராவையும் அவளது சகோதரிகளையும் சர்வேசுரனுடைய மகிமைக்கு மாத்திரம் வாழவும், அவர் படைத்த சகலத்திற்காகவும் ஏன் இன்னும் மரணத்திற் காகவும் அவருக்கு நன்றி செலுத்தவேண்டு மென்று அறிவுரை கூறினார்.

39. நோய்வாய்ப்பட்ட பிரான்சிஸ் சிறிது காலத்தில் இறக்க, அவரது சரீரம் அசிசி நகருக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இறுதி ஊர்வலமானது அர்ச். தமியான் மடத்தைக் கடந்து செல்லும் பொழுது கிளாராவும் மற்ற சகோதரிகளும் அர்ச். பிரான்சிஸுடைய சரீரத்தை மடத்தின் ஜன்னல் வழியாக கடைசி முறையாக பார்த்தார்கள். கிளாரா தன்னுடனிருந்த சகோதரிகளிடம் பிரான்சிஸ் நமக்கு கூறிய அனைத்தையும் கடைபிடிப்போம் ! எல்லாவற்றையும் சர்வேசுரனுடைய மகிமைக்காகச் செய்வோம் என்று கூறினாள்.

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை
## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### முதல் பாகம்

**இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)**

### 8. சுவிசேஷ வாக்கியம் – Evangelium

**சுவிசேஷம் வாசித்தல்.**



சுவிசேஷம் வாசிக்கப்படுவதற்கு முன்பாக உள்ள துவக்கநிலையானது: (1) பரஸ்பர முகமன் கூறுதல் மற்றும் (2) வாசிக்கப்படும் சுவிசேஷத்துக்கான அறிவிப்பு ஆகிய இரு பகுதிகளாகக் கொண்டது. “Dominus vobiscum... ஆண்டவர் உங்களோடு இருப்பாராக” என முகமனை குரு கூற, விசுவாசிகள் “Et cum spiritu tuo... உமது ஆவியோடும் இருப்பாராக” என்று பதில் முகமன் கூறுகிறார்கள்.

இங்கே சர்வேசுரனுடைய வார்த்தை சரியான முறையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும், அது விசுவாசத்தோடு கவனிக்கப்பட்டு, பின்பற்றப்பட வேண்டும் என்ற திருச்சபையின் ஆதங்கம் ! ஆவல் வெளிப்படுவதைக் காணலாம். எப்படி அன்று ஆண்டவர் இசையாஸ் தீர்க்கதரிசியின் வாயிலாக ”மழையும் பனியும் வானினின்று இறங்கித் திரும்பிச் செல்லாது; பூமியைச் சலமிறைத்துச் செழிப்பாக்கி, முளையரும்பச் செய்து, விதைப்பானுக்கு விதையையும் புசிப்பானுக்கு அப்பத்தையும் தருதலெங்ஙனமோ அங்ஙனமேயாகும் நமது நாவினின்று புறப்படும் நம் வாக்கியமும்; அது பயன் தராது நம்மிடம் திரும்பாது; அதற்கு மாறாக நாம் இஷ்டப்பட்டவைகளைச் செய்து, யாது கருத்தோடு அனுப்பினோமோ அப்பயனை விளைவிக்கும்” (இசை. 55: 10, 11) என்று தமது விருப்பத்தை விளக்குகிறாரோ அது நிறைவேற திருச்சபை விரும்புகிறது.

நமது காதுகளுக்கு சப்தம் மட்டும் ஊடுருவினால் மட்டும் போதாது; ஆனால் சத்தியத்தின் ஆவியானவர் பரலோக வரப்பிரசாதத்தின் வெளிச்சத்தோடும் அவரது ஒன்றிப்போடும் இணைந்து கேட்டவற்றைப் புரிந்துகொள்ளவும், அதனின் வியத்தகு கருத்துக்களையும், அவை கொண்டுவரும் ஞான செல்வங்களையும் விரும்பவும் செய்கிறது. சர்வேசுரனின் ஆவியானவர் தமது மறைபொருளான வல்லமையால் தெய்வீக வார்த்தையை நினைவாலும், சித்தத்திலும் செயலிலும் எந்தவிதமான தங்குதடையுமின்றி ஏற்றுக்கொள்ளச்செய்ய நம்மை இளகச்செய்து ஈர்க்கின்றது. உண்மையான, தெளிவான, வைராக்கியமான விசுவாசமென்பது கடவுள் நமக்கு வழங்கும் விலைமதிப்பில்லாத கொடையாக இருக்கிறது. அதே சமயம் அதனை ஏற்றுக்கொண்டு, வளர்ச்சியடைவது, என்ற ஒரு புண்ணியமும் நமக்குத் தேவை.

சுவிசேஷம் வாசிக்கப்படும் முன்பாக குருவும் ! விசுவாசிகளும் இவ்வாறு பரஸ்பர முகமன் கூறிக்கொள்வதன் மூலம் ! அவர்கள் தெய்வீக உண்மைகளை மகிழ்ச்சியான விசுவாசத்துடன் நேசிக்கவும், அவற்றை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியவும் தேவையான சர்வேசுரனின் வரப்பிரசாதத்தை இருவரும் ஒருவருக்கொருவர் அடைந்துகொள்ள முயல்கிறார்கள். இதற்காகவே இந்த முகமன் கூறப்படுகிறது.

சுவிசேஷப் பகுதியானது சாதாரண வார்த்தைகளால் வாசித்து அறிவிக்கப்படலாம். அல்லது பாடலாக இராகத்தோடு இசைத்து வாசிக்கப்படலாம். அது நிறைவேற்றப்படும் பூசையின் தரத்தைப் பொருத்து அமையும்.

குரு, ஒவ்வொரு 4 சுவிசேஷத்தின் துவக்கத்திலும் “Sequentia Sancti Evangeli Secundum... Matthaeum !

அர்ச். மத்தேயு (மாற்கு, லூக்காஸ், அருளப்பர்) எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி" என்று கூறி ஆரம்பிக்கிறார். பீடப் பரிசாரகரும், விசுவாசிகளும் "Gloria tibi Domine... ஆண்டவரே உமக்கு மகிமையுண்டாவதாக" என்று பதில் கூறிகிறார்கள்.



சேசுக்கிறீஸ்துவின் மாறாத "ஒரே சுவிசேஷம்" இஸ்பிரீத்து சாந்துவானவரின் ஏவுதலால் நான்கு சுவிசேஷகர்களால் நான்கு விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதனைக் குறிப்பதற்கு "Sequentia... எழுதிய படியே" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இப்படி நல்ல வாசகங் கள்அறிவிக்கப்படும்போது, நமதாண்டவரின் புகழ்ச்சி வார்த்தைகளைச் சொல்லாமல் இருக்க முடியுமா? கோடிக்கணக்கானோர் இன்னமும் ஆன்ம இருளில் மூழ்கியிருக்க நம்மை அளவில்லாத வகையில் தேர்ந்தெடுத்து தம்மையே நமக்கு வெளிப்படுத்தும் கடவுளின் தயாளத்தை நாம் புகழாமல் இருக்கமுடியுமா? ஆகையால்தான் விசுவாசிகளும் "Gloria tibi Domine... ஆண்டவரே உமக்கு மகிமையுண்டாவதாக" என்று கூறிகிறார்கள்.

பின்பு குருவானவர் என்று கூறும் "Sequentia Sancti Evangeli - பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி..." என்று கூறும்போது தமது வலது கை பெருவிரலால் முதலில் சுவிசேஷப் பத்திலும், அவரது நெற்றியிலும், வாயிலும் பின்னர் மார்பிலும் சிலுவை அடையாளம் வரைந்துகொள்கிறார். இப்படி சுவிசேஷப் புத்தகத்தில் சிலுவை அடையாளம் வரைவதானது, முழு சுவிசேஷமும் முழு வேதசத்தியமும் மீட்பின் அலுவலும் இணைந்து ஒன்றாக சிலுவையின் பரம இரகசியத்தில் ! கடவுள் ! மனிதனானவரின் இரத்தம் சிந்தி பலியான மரணத்தைக் கொண்டுள்ளது. அதுவே உலகத்தின் மீட்புக்கு காரணமாக இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. (இப்படி புத்தகத்தின் மீது சிலுவை அடையாளம் வரைவது அதனை ஆசீர்வதிப்பதற்காக அல்லாமல், வெறும் அடையாளம் காட்டுவதற்காகவே வரையப்படுகிறது.) ஆகையால்தான் அர்ச். சின்னப்பர் சுவிசேஷத்தை "**சிலுவையின் வார்த்தை**" என்று அழைக்கிறார். அவர் மூன்றாம் வானமண்டலங்கள் வரையிலும் எடுத்துக்கொள்ளப்பட்டு, மனிதனால் கூறமுடியாதவைகளைக் கேட்கவும் பார்க்கவும் பாக்கியம் பெற்றார். அதனால்தான் அவர் சேசுக்கிறீஸ்துவையும் அவரது சிலுவையையும் மட்டுமே அறியவும், அவைகளைப் போதிக்கவும் விரும்பினார். அர்ச்சியசிஷ்டவரின் மகிமையை கிறீஸ்துவின் சிலுவையில்தான் தேடினார். அதிலேதான் எனது மீட்பு, வாழ்வு, உயிர்ப்பெல்லாம் அடங்கியுள்ளது. சிலுவை கடவுளின் அன்பையும், ஞானத்தையும் பராமரிப்பையும் காட்டுகிறது. அது எல்லா கிறீஸ்தவப் புண்ணியங்களையும், உலகத்தையும், தன்னையும் மறுத்தல், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், விசுவாசம், பொறுமை, நம்பிக்கை, தேவசிநேகம், பிறர்சிநேகம் ஆகிய எல்லா கிறீஸ்தவப் புண்ணியங்களைப் போதிக்கிறது. சுவிசேஷத்தில் சிலுவை அடையாளம் வரையப்படுவதனால் நமக்கு இவை அனைத்தையும் நினைவுப்படுத்துகிறது.

குருவும், விசுவாசிகளும் தமது நெற்றியில், வாயில், நெஞ்சில் சிலுவை அடையாளம் வரைவதானது: சிலுவையின் சத்தியத்தைக் காத்துக்கொள்ள விரும்புவதன் அடையாளமாகவே வரையப்படுகிறது. உலகிற்கு சிலுவையின் போதனையை வெளிப்படையாக மகிழ்ச்சியோடு வெட்கப்படாமல் அறிவிக்கவும்; வார்த்தையாலும் செயலாலும் சிலுவையில் அறையப் பட்ட கிறீஸ்துவை போதிக்கும் குருவானவரின் இந்த அடையாளம் சர்வேசுரனில் கிறீஸ்துவோடு மறைந்த வாழ்வுக்கான வெளிப்பாடாக இருக்கிறது. கிறீஸ்துவோடு சிலுவையில் அறையப்படவும், அவரோடு இணைந்திருக்கவும் உலகத்திற்கு சிலுவையில் அறையப்பட்டவர்களாய் இருப்பதற்குமான அறைகூவலாக இருக்கிறது. நமதாண்டவர் ஒருசமயம் முத். ஃபோலிஞா ஆஞ்சலாவிற்கு வெளிப்படுத்தியது போல: "சுவிசேஷ வார்த்தை ஆன்மாவினுள் வலிமையோடு ஊடுருவுவது எப்போது என்றால் திரு இரத்தத்தால் நனைக்கப்பட்ட உதடுகளிலிருந்து புறப்படும்போதுதான். சிலுவை முக்கியமான அடையாளம் மாத்திரமல்ல, அது தீயவனிடமிருந்து பாதுகாக்கும் வல்லமை உள்ளதாகவும் இருக்கிறது. அவன் வந்து தெய்வீக வார்த்தைகளை நமது இருதயங்களிலிருந்து பறித்துச் சென்றுவிடாமல் இருப்பதற்கான முதன்மையான பாதுகாப்பாகவும் சிலுவை இருக்கிறது".

மேலே குறிப்பிட்டது போல ஒவ்வொரு சுவிசேஷப் பகுதிக்கும் திருவழிப்பாட்டு ஆண்டின் திருநாட்கள் மற்றும் பரிசுத்த காலங்களுக்கு ஏற்ப தேர்வு செய்யப்படுகின்றன. உண்மையிலேயே சுவிசேஷம் தனது அர்த்தத்திலும், முக்கியத்து வத்திலும் பூசையின் மற்ற எல்லா பாகங்களிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இது அந்த நாளைய கொண்டாட்டத்தின் அடிப்படை நினைவுகளின் நிறைவான விளக்கமாக இருக்கிறது.

(தொடரும்)

**நாம் தேவ உதவியால் செய்யும் நற்கிரியைகளில் வீண் பெருமைகொள்ள எப்போது ஆரம்பித்தோமோ,அப்போதே அக்கிரியைகள் நாம் புண்ணியத்தில் விருத்தியடைவதற்கு உதவாமல் போய்கின்றன** ! அர்ச். அகுஸ்தினார்.

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் Rev. George A. Kelly எழுதிய "The Catholic Family Hand Book" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

## 1. மகிழ்ச்சியான குடும்பம் (தொடர்ச்சி)
## பெற்றோர்களின் அலுவல்!

ஒரு குடும்பத்தில் கணவனோ, மனைவியோ அல்லது இருவரும் சேர்ந்தோ தங்களது வேத கடமைகளை தொடர்ந்து சரியாக அனுசரிப்பதை நிறுத்துவது, அவர்களது திருமணம் ஆபத்துக்குட்பட்டிருக்கிறது என்பதற்கான அறிகுறியாகும். கடவுளுக்கு உகந்த நல்ல குடும்பங்களிலிருந்து சிறுவயது குற்றங்களுக்காக எந்த ஒரு சிறு பிள்ளையும் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்படவில்லை என்றும், சிறுவயது முதல் நிறைகற்பு பற்றி அறிந்து கொண்ட தெய்வபயமிக்க குடும்பங்களில் உருவான பெண்கள் ஒருபோதும் தங்கள் பரிசுத்ததனத்தை இழக்கமாட்டார்கள் என்றும், திருமணமாகாமலேயே தாய்மை அடைந்த பெண்களைப்பற்றி ஆய்வு கூறுகிறது!

மகிழ்ச்சிமிக்க குடும்பத்தின் இரண்டாவது குணாதிசயம், மற்ற எல்லாக் காரியங்களையும்விட குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதே. பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை புண்ணியத்தில் நன்கு வளர்ப்பதே சர்வேசுரனுடைய சமுகத்தில் தங்களுக்கு சம்பாவனையைப் பெற்றுத்தரும் என்பதை உணர்ந்திருப்பார்கள். சில குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் வாரத்தின் பெரும்பான்மையான நாட்களை அயராது உழைத்து பொருள் ஈட்டுவதினால் தங்களது பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக செயல்பட முடியும் என்று நினைக்கின்றனர். ஆனால் அதே சமயம் தங்களை, பிள்ளைகள் ஒரு மனிதனாக மதிக்க வேண்டும், அறிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படை தேவையை மறுக்கின்றனர்.



இதற்கு மாறாக வேறு வகையான குடும்பங்களின் தலைவர்கள், பொருளாதார ரீதியில் தாழ்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் பொருள் ஈட்டுவதில் அதிக நேரத்தை செலவிடாமல், தங்களுடைய குழந்தைகளுடன் விளையாடுவதிலும், அவர்களோடு உரையாடுவதிலும், அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டு தீர்ப்பதில் ஈடுபடுவதிலும், அவர்களின் மேலான விருப்பங்களைக் கேட்டு உற்சாகமூட்டுவதிலும் ஈடுபடுவார்கள். தங்களது ஓய்வு நேரங்களை தங்களுடைய குழந்தைகளோடு இப்படி செலவிடுபவர்களே நல்ல மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்குவதில் வெற்றி பெறுவர்.

மகிழ்ச்சி மிக்க குடும்பத்தில் பெற்றோர் தங்களுடைய குழந்தைகளை நன்கு கவனித்து வளர்க்கும் பொறுப்பை முதன்மையான அலுவலாகக் கொண்டிருப்பார்கள். அதற்காக தீவிரமாக பொது வாழ்வில் ஈடுபடுவது, பொழுதுபோக்கு கேளிக்கைகளில் இன்பத்தைத் தேடுவது, விளையாட்டு, சீட்டாட்டம், நடனம் போன்றவற்றில் நேரத்தைச் செலவிடுவதுமான உலகக் கவர்ச்சிகளை இத்தகையப் பெற்றோர்கள் தவிர்த்துவிட முயல்வார்கள்.

இத்தகைய பொழுதுபோக்குகளுக்கு தங்களுடைய பிள்ளைகளை அவர்கள் கூட்டிச் செல்வதில்லை. ஆண்கள் தங்களுடைய குடும்பங்களுக்குத் தேவையானவற்றை சம்பாதிக்க வேண்டும் என்பது வேதச் சட்டம். குடும்பத்தில் பெற்றோர் குழந்தை களை நல்ல முறையில் உருவாக்கும் பொறுப்போடு, இளைப்பாற்றியைத் தரும் நல்ல பொழுதுபோக்கில் ஈடுபடலாம். பகல் முழுவதும் உழைப்பினால் ஏற்படும் உடல் நோவை மாலையில் எடுக்கும் ஓய்வு குணமாக்கும். தகப்பன் பொருள் ஈட்டுவதில் வெற்றி பெறவேண்டும் என்று பேராவல் கொள்வதோ, பொழுதுபோக்குகளில் இன்புறுவதோ குற்றமாகாது. ஆனால் இவைகளுக்காக தமது குழந்தைகளைப் புறக்கணிக்கும் போது அல்லது தாயானவள் குடும்பத்தைக் கவனிக்காது தொடர்ந்து பொது வாழ்வில் ஈடுபடும்போது, அக்குடும்பத்தின் ஒற்றுமை என்னும் மாபெரும் பந்தனம் வலுவிழந்து பலவீனமாகிவிடும். குடும்பத்தில் ஒருவர் ஒருவர் மீது கொள்ளும் அந்நியோன்னிய அன்பு அல்லது மதிப்பே மெய்யான குடும்ப ஜீவியத்தை உருவாக்கும் அடிப்படைப் பண்புகளாகும். குடும்பத்தில் தந்தையோ அல்லது தாயோ தங்களுடைய பிள்ளைகளுக்கு, பதிலாக வேறு குறிக்கோள்களுடன் ஜீவித்தால் குடும்ப வாழ்வின் அடிப்படை பண்புகள் வளர்ச்சி அடையாமல் போகும்.

மகிழ்ச்சி மிக்க குடும்பத்தில் மூன்றாவது பண்பு: குடும்பத்தில் தந்தையும் தாயும் சம அந்தஸ்தில் இருப்பர். ஆனால் தந்தைதான், குடும்பத்தின் தலைவர் என்பதில் யாதொரு கருத்து வேறுபாடும் அங்கு இருக்காது. அனைவரும் அதை அங்கீகரிப்பர். குடும்பத்தின் முக்கிய ஸ்தானத்தை தாய் பெற்றிருக்கிறாள் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அன்பிற்கும் அரவணைப்பிற்கும் பொறுப்பாளியாகவும், குழந்தைகளின் முதல் ஆறுதல் தருபவளாகவும், ஆசிரியையாகவும் விளங்கும் தாயானவள், குடும்பத்தின் இதயமாகவே திகழ்கின்றாள். இத்தகைய நீதியும் தகுதியுமான அந்தஸ்து தாய்க்கு அளிக்கும் அதே நேரத்தில் குடும்பத்தில் தொன்றுதொட்டு தகப்பனுக்கு அளிக்கப்படும் அந்தஸ்தை நாம் பலவீனப்படுத்தலாகாது.

குடும்பத்தில் தகப்பன், தனது சுபாவத்தினாலும், குணநலன்களினாலும் குடும்பத்தின் தலைமை ஸ்தானத்தைக் கையாள வேண்டும். அவ்வாறு அவர் செய்யத் தவறும்போது, அவருடைய குழந்தைகள் தங்களுடைய வாழ்வில் தங்களை வழிநடத்தக்கூடிய, கண்டுபாவிக்கக்கூடிய நன்மாதிரிகையை இழக்கிறார்கள். அதனால் ஆண்களும், பெண்களும் எவ்வாறு குடும்பத்தில் ஜீவிப்பது என்பதைப் பற்றிய போதுமான அறிவு இல்லாமலேயே, அக்குழந்தைகள் வளர்ந்து வயதில் முதிர்ச்சியடைகிறார்கள். ஆனால், தகப்பன் குடும்பத்தின் தலைவன் என்பதற்காக, தனக்கு முன்பாக மனைவியும் பிள்ளைகளும் எப்பொழுதும் நடுங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்றிருக்கக் கூடாது. தனது வார்த்தையே சட்டமாக இருக்க வேண்டும் என்றும் இருக்கக் கூடாது.

அப்படி இருந்தால் ஒரு தகப்பன் தன் குழந்தைகளுக்கு நன்மையைவிட தீமையையே அதிகம் செய்கிறான். அத்தகையான பிள்ளைகள் ஒன்று, எல்லாவற்றிலும் ஒத்துப்போவார்கள் அல்லது யாதொரு அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளாதவர்களாக, சட்ட ஒழுங்கை அனுசரியாத மக்களாய் திகழ்வர். ஆனால் மகிழ்ச்சி நிறைந்த குடும்பங்களிலே தகப்பன் நீதியோடு தண்டிக்கும் ஒரு தலைவராக இருப்பான். அதே நேரத்தில் குடும்பத்தில் அறிவுபூர்வமாக அனைவரும் ஏற்கக்கூடிய ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துவதாலும், இரக்கத்துடன் அவர்களை அரவணைப்பதாலும், அவருடைய குழந்தைகளிடம் தகப்பன் நன்மதிப்பைப் பெறுவான்.

(தொடரும்)

9!ம் பக்கம் தொடர்ச்சி...

தன்னுடைய 42!ம் வயதில் மீண்டும் உண்மையான குருவாக வேண்டும் என்று ஆசித்து ரோமாபுரியில் உள்ள குருமடம் ஒன்றில் சேர்ந்தார். அநேக கஷ்டங்கள் அவருடைய வாழ்வில் தோன்றின. பழைய நண்பர்கள் எதிரிகளாய் ... இருப்பினும் சிறிய சிலுவைகள் நம்முடைய அர்ச்சியசிஷ்டதனத்திற்காக அளிக்கப்படுபவைகள் என்ற அர்ச். குழந்தை தெரசம்மாளின் சிறிய வழி போதகத்தின்படி வாழ்ந்தார்.

1949!ம் ஆண்டு குருப்பட்டம் பெற்ற பின்னர் தன்னுடைய முதல் பூசையை லிசியேவில் அதுவும் குழந்தை தெரசம்மாள் இறந்த அறையில் நிறைவேற்றும் பாக்கியம் பெற்றார்.

அர்ச். குழந்தை தெரசம்மாளின் ‘ஞான குழந்தைத்துவத்தை’ பற்றி போதிக்க தொடங்கினார். நூல்கள் பல எழுதினார். கட்டுரைகள் வடித்தார். இதற்காக ‘Sicut Parvuli’ என்ற இதழை தொடங்கினார். மேலும் St. Therese Priestly Association’ என்ற சபையை குருக்களுக்காகத் தொடங்கினார். பல்வேறு நாடுகளிலிருந்து குருக்கள் இச்சபையில் ஆவலுடன் உறுப்பினர்களாய் சேர்ந்தனர்.

வழி தவறிப்போன குருக்கள் நல்வழி திரும்பவேண்டும் என்பதற்காக தன்னுடைய இறுதி நாளை ஒப்புக்கொடுத்தார். பல ஜெபமாலைகளை அந்தக் கருத்துக்காக ஒப்புக்கொடுத்த அவர் 1969!ம் ஆண்டு நித்திய இளைப்பாற்றிற்குச் சென்றார்.


வாசகர்களே, இவ்வாண்டு குருக்களின் ஆண்டு. குருக்களுக்கு அர்ச். மரிய வியான்னி பாதுகாவலர் என்றால், குருக்களுக்கு உதவுவோருக்கு அர்ச். குழந்தை தெரசம்மாளே முன்மாதிரிகை. நம்மாலான உதவியை நம் ஞான மேய்ப்பர்களுக்கு செய்வது என்ற திருச்சபை கட்டளையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதற்காக நாம் செய்ய வேண்டியவை என்னவென்பதை சங். வளன் சுவாமி அவர்கள் தெளிவாக விவரித்துள்ளார் (cf. Editorial issue 6 &7). அவற்றை நடைமுறை படுத்தினாலே போதும். குருத்துவத்திற்காக நாம் செய்யும் ஆக்கப்பூர்வச் செயல் திருச்சபையின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாய் இருக்கின்றது.

**தெரேசியன் பாபு**
**அர்ச். தாமஸ் அக்குவினாஸ் குருமடம்**
**வினொனா, 2009**

**“என் பிள்ளைகள் எல்லோரும் சர்வேசுரனுக்குச் சொந்தம்; அவருடைய பிள்ளைகள் அவர்கள்; அவர்கள்மீது எனக்குள்ள பாத்தியத்தை விட சர்வேசுரனுக்கு அதிக பாத்தியமுண்டு”**

! அர்ச். வியானி அருளப்பரின் தாயார்.

# மோட்சத்திலே... சம்மனசுக்கள் பரமண்டலங்களிலேயிருக்கிற என் பிதாவின் சமுகத்தை இடைவிடாமல் தரிசிக்கிறார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 18:10.)



பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன், என்று ஜெபிக்கும் போது, சர்வேசுரன் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தார் என்னும் சத்தியத்தை வெளிப்படுத்துகிறோம். நாம் வசிக்கும் இப்பூமி யானது பூலோகமென்றும், இப்பூமிக்கு மேலிருக்கும் வான மண்டலமானது பரலோகம் என்றும் சொல்லப்படும். சர்வேசுரன் பூலோகத்தில் தங்கம், வெள்ளி, நவரத்தினங்களை உண்டாக்கி வைத் திருப்பது போலவே பரலோகத்திலும் பிரகாசமுள்ள மாணிக்கங்க ளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை உண்டாக்கி அதை அலங்கரித் திருக்கிறார். இப்படியே இப்பூலோகத்தில் அறிவுள்ள மனிதர்களை சிருஷ்டித்து வைத்திருப்பது போல் பரலோகத்திலும் அதி உத்தம அறி வுள்ள கோடிக்கணக்கான சிருஷ்டிகளை உண்டாக்கி வைத்திருக் கிறார். இந்த உன்னத, சிருஷ்டிகளுக்கு சம்மனசுக்கள் என்று பெயர்.

## சம்மனசுக்கள் உண்டென்பது மறுக்கப்படாத சத்தியம்

சம்மனசுக்கள் உண்டென்னும் சத்தியம் வேதபுத்த கத்தை வாசிக்கும் எவருக்கும் எளிதாய் விளங்கும். சர்வே சுரன் நமது ஆதித்தாய், தந்தையரை (பெற்றோரை) சிங்காரத் தோப்பிலிருந்து வெளியே துரத்தியபின் திரும்பவும் அவர்கள் அத்தோப்பில் நுழையாதபடி ஒரு சம்மனசைக் காவல் வைத் தார். அபிரகாம் தம் மகனைப் பலியிடப்போகையில் அவரைத் தடுத்தது ஒரு சம்மனசு. பூமியிலிருந்து வானலோக மட்டும் நாட்டப்பட்டிருந்த ஏணியில் சம்மனசுக்கள் ஏறு வதையும், இறங்குவதையும் யாக்கோபு கண்டார். இஸ்ரா யேலருக்கு வனாந்தரத்தில் முன்னின்று வழிகாட்டி நடத்தி னதும், சின்ன தொபியாசுக்கு அநேக உதவி புரிந்ததும் ஓர் சம்மனசு. அர்ச். ஸ்நாபக அருளப்பர் பிறக்கப் போகிறதை அவருடைய தந்தைக்கு அறிவித்ததும், தேவமாதாவுக்கு மங்களவார்த்தை சொன்னதும், கர்த்தர் பிறந்தவுடன் வான மண்டலத்தில் கூட்டமாய் நின்று தேவ ஸ்துதி பாடினதும், தேவ குழந்தையைத் தரிசிக்க இடையர்களை பெத்லகேம் குகைக்கு அனுப்பினதும், திவ்விய சேசுவின் நாற்பது நாள் உபவாசத்திற்குப் பின் அவருக்கு ஊழியஞ் செய்ததும், பூங்கா வனத்தில் அவருக்கு ஆறுதல் சொன்னதும், அவர் உத்தானத் தைப் புண்ணிய வதிகளாகிய ஸ்திரீகளுக்குத் தெரிவித்ததும் சம்மனசுக்களே. இவ்வாறு பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நாம் வாசிக்கும் சம்பவங்கள், சம்மனசுக்கள் உண்டென்னும் சத்தியத்தை சந்தேகமில்லாமல் நிருபிக் கின்றன. செசிலியம்மாள், ஆக்னேஸம்மாள், வென்செஸ்! லாஸ் இராஜா, பிரான்சிஸ் ரெஜீஸ், ஸ்தனிஸ்லாஸ் கோஸ்ட்கா முதலிய அர்ச்சியசிஷ்டவர்கள், தங்கள் காவல் சம்மனசுக்களைப் பார்த்ததாக அவர்கள் சரித்திரத்தில் வாசித் திருக்கிறோம்.

## சம்மனசுக்களின் இலட்சணங்கள்

சம்மனசுக்கள் உடலில்லாத அரூபிகள், சாகாவரம் பெற்றவர்கள். உடலுள்ள பிராணிகளைப் போல் அவர்க ளுக்கு வியாதி, வேதனை, களைப்பு, தூக்கம், குளிர், உஷ்ணம் என்பது எதுவும் கிடையாது. நம்மைப் போல் அவர்கள் வளர்ந்து வயோதிகராகிறதும் இல்லை. ஆயினும் அவர்கள் தேவ கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு மனிதரிடம் வரும்போது மனித உடலுடன் தோன்றுகிறார்கள். ஆனால் மனிதரின் ஐம்புலன்களுக்கு தெரியப்படும்படியாக இவ்வாறு மனித உருவில் காட்சியளிக்கிறார்களே தவிர, அவர்க ளுக்கு சொந்தமான உடல் இல்லை. இதே நிமித்தந்தான் சம்மனசுக்கள் மனித உருவமுள்ளவர்கள் போல் படங்க ளிலும், சுரூபங்களிலும் காணப்படுகிறார்கள். சம்மன சுக்களுக்கு உடல் இல்லாததால் பசி, தாகம் என்பது இல்லை யென்றாலும் சிற்சில சமயங்களில் சம்மனசுக்கள் மனிதருடன் பந்தியிலமர்ந்து, சாப்பிட்டதாக வேத புத்தகம் கூறுகிறது. ஆனால் அவர்கள் சாப்பிட்டதாக மனிதர் கண்ணுக்கு தோன் றினதே தவிர உண்மையில் அவர்கள் சாப்பிடவே இல்லை. "உங்களுடன் நான் புசிப்பதாகவும், குடிப்பதாகவும் காணப் பட்டேனே தவிர (மெய்யாகவே) உண்மையில் மனிதர் கண் ணுக்குத் தெரியப்படாத அன்னத்தையும், பானத்தையும் மாத்திரமே உபயோகித்தேன்" (தோபி. 12:19) என அர்ச். இரபேல் என்னும் சம்மனசானவர் தோபியாசுக்கு சொன் னார். சம்மனசுக்களுக்கு உடல் இல்லாததால், ஒரு நொடியில் அநேக காததூரம் புயல் வேகம், மனோவேகமாய் செல்லக் கூடியவர்கள். சம்மனசு இறக்கையுள்ளதாக படங்களில் காண்பிக்கப்படுவதற்கு இதுவே காரணம்.

சர்வேசுரன் சம்மனசுக்களின் சுபாவத்தை மனித சுபா வத்துக்கு ஆயிரம் மடங்கு மேலானதாக உண்டாக்க சித்த மானார். ஆதலால் அவர்கள் மிகத் தெளிவான ஞானமும் உறுதியான சுய மனதும் பொருந்திய மகிமையுள்ள சிருஷ்டிகள்.

மனிதன் தன் ஐம்புலன்களை உபயோகித்து, கஷ்டப்பட்டு படித்து, அறிவென்னும் தத்துவத்தினால் ஆலோசித்து அறிந்துகொள்ளும் படிப்பினைகளை சம்மனசுக்கள் தங்கள் புத்தி பலத்தினால் வெகு எளிதாக அறிந்து கொள்ளும் சுபாவமுள்ளவர்கள். அவர்களுக்குள்ள வல்ல பமும், பலமும் எந்த மனிதனுக்குமில்லை. அசிரீயர் பட்டாளத்திலிருந்த நூற்று எண்பத்தையாயிரம் போர் வீரர்களை ஒரே சம்மனசு எதிர்த்துத் தாக்கி ஒரே இரவில் கொன்றுவிட்டதாக பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. சர்வேசுரன் சம்மனசுக்களை இந்த சுபாவ நன்மையோடு மாத்திரம் விட்டுவிடவில்லை. விசுவாசம் நம்பிக்கை, தேவசிநேகம், தேவ இஷ்டப்பிரசாதம் முதலிய சுபாவத்துக்கு மேலான தேவ வரங்களால் அவர்களை அலங்கரித்தார்.

## கெட்ட சம்மனசுக்கள்

சர்வேசுரன் சம்மனசுக்களை உண்டாக்கியவுடனே மோட்ச இராச்சியத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை. தம்மால் அவர்களுக்குத் தயவாய் அளிக்கப்பட்ட உன்னத வரங்களின் உதவியைக் கொண்டு, தங்கள் சொந்த பிரயாசையினால் மோட்ச பாக்கியத்திற்கு அவர்கள் பாத்திரவான்களாக வேண்டுமென்று அவருடைய திருச்சித்தமாயிருந்தது. ஆனால் படைக்கப்பட்ட சம்மனசுக்களுள் மிக பலசாலியும் முதன்மையானதுமான லூசிபேர் சம்மனசு தனக்குள்ள ஞானம், பலம் முதலான சுபாவ நன்மைகளையும் தேவ இஷ்டப்பிரசாதம் முதலிய சுபாவத்திற்கு மேலான ஞான நன்மைகளையும் கண்டு கர்வம்கொண்டு, அகங்காரத்தினால் தன்னுடன் இன்னும் அநேக சம்மனசுக்களைக் கூட்டிச் சேர்த்து கலகம் செய்தது. இவர்கள் எல்லோரும் சர்வேசுரனுக்கு கீழ்ப்படிய மாட்டோமென்று பிடிவாதம் செய்து தேவ துரோகிகளானார்கள். ஆனால் சர்வ வல்லபரான சர்வேசுரன் தமக்குக் கீழ்ப்படியாத அகங்காரிகளாகிய இந்தக் கெட்ட சம்மனசுக்களை சபித்து நரகத்தில் வீழ்த்தினார்.

இவ்வாறு தேவ சாபத்தினால் அக்கினி சமுத்திரத்தில் வீழ்ந்து என்றென்றைக்கும் வேதனை அனுபவித்து வரும் கெட்ட சம்மனசுக்களையே பேய், பசாசு, அலகை, சாத்தான் என்கிறோம். தங்களால் சர்வேசுரனை நேரே எதிர்க்க முடியாதென நன்கு உணர்ந்த இந்தப் பேயினங்கள், அவரால் சிருஷ்டிக்கப்பட்டு, தாங்கள் இழந்து போன மோட்ச பாக்கியத்தை அடைய சுதந்திரம் பெற்றிருக்கும் மனிதர்களை கெடுத்துத் தங்கள் நித்திய வாசஸ்தலமாகிய நரகாக்கினி சமுத்திரத்துக்கு இழுத்துக் கொண்டு போவதே தங்கள் பிரதான வேலையாக செய்து வருகின்றன.

## நல்ல சம்மனசுக்கள்

கெட்ட சம்மனசுக்களை இப்படித் தண்டித்த நீதிபரரான சர்வேசுரன் தமக்குக் கீழ்ப்படிந்து நடந்த நல்ல சம்மனசுக்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு மோட்ச பாக்கியம் அளித்தருளினார். இவர்களின் தொகை இவ்வளவென்று நம்மால் கணக்கிட முடியாது. ஆனால் நல்ல சம்மனசுக்கள் மூன்று பெரிய வகுப்பாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று விலாசங்கள் உண்டென்பது வேதசாஸ்திரிகளின் படிப்பினை. ஆதலால் சம்மனசுக்களின் கூட்டத்தை நவவிலாச சபையென்று திருச்சபை அழைக்கிறது. இந்த ஒன்பது விலாச சபைகளுக்கு முறையே பக்திசுவாலகர், ஞானாதிக்கர், பத்திராசனர், நாதகிருத்தியர், சத்துவர், பலவத்தர், பிராதமிகர், அதிதூதர், தூதர்கள் என்னும் பெயர் வழங்கி வருகிறது.

## நவவிலாச சபை

முதல் விலாச சபையில் அடங்கிய சம்மனசுக்கள் சர்வேசுரனுடைய (அளவறுக்கப்படாத) அளவில்லா கிருபையையும் நன்மைத்தனத்தையும் பிரத்தியட்சனமாய்ப் பார்த்து தெய்வீக பக்தி சிநேகத்தினால் சுவாலிக்கிறவர்களாயிருப்பதால் **பக்தி சுவாலகர்** என்று அழைக்கப்படுகின்றனர்.

இரண்டாம் விலாசத்திலுள்ளோர் தேவசுபாவத்தின் பரம இரகசியங்களை மற்றவர்களைவிட உத்தம விதமாய் அறிந்தவர்கள்; **ஞானாதிக்கர்** என்பது இவர்கள் நாமம்; அதாவது, நிறைந்த ஞானமுள்ளவர்கள்; சர்வேசுரனைப் பற்றிய ஞானத்தில் ஆதிக்கம் அல்லது முதன்மை பெற்றவர்கள்.

தேவ சிம்மாசனத்திலிருந்து சர்வேசுரனை சதா போற்றிப் புகழ்வதே மூன்றாம் விலாச சபையாரின் அலுவல். இதனிமித்தம் இவர்கள் **பத்திராசனர்** எனப்படுகிறார்கள்.

சகல சிருஷ்டிகளையும் தேவ திருவுளப்படி ஆண்டு நடத்தத் தக்க ஏற்பாடுகளைச் செய்வது நாதகிருத்தியரின் வேலை. அவனவன் செய்யவேண்டிய வேலையைப் பிரித்துக் கொடுப்பதும் ஆட்சிபுரிவதும் நாதனுடைய கிருத்தியம் என்று சொல்லப்படுவதால், நான்காம் சபையைச் சார்ந்த சம்மனசுக்களுக்கு **நாதகிருத்தியர்** என்னும் பெயர் பொருந்தும்.

சுபாவ ஒழுங்குக்கு மேலாயிருக்கிற பெரிய அற்புதங்களைச் சர்வேசுரனுடைய சித்தப்படி நடத்துகிறவர்களுக்கு **சத்துவகர்** அல்லது **சத்திகர்** என்னும் நாமம் அளிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்ச அரசாட்சியில் பேய்களினாலும் மற்ற படைக்கப்பட்ட வஸ்துக்களினாலும் வரக்கூடிய தடைகளை விலக்குவது **பலவத்தரின்** அலுவல்.

மனுக்குலம் முழுவதையும் ஆண்டு நடத்தி இராச்சிய சம்பந்தமான சாதாரண நன்மைகளை நடத்துவதில் தலைமை பெற்றவர்கள் **பிராதமிகர்** அல்லது முதன்மையானோர் எனப்படுவார்கள். மனிதர்களுக்கு விசேஷ காரியங்களை வெளிப்படுத்தும்படி சர்வேசுரனால் அனுப்பப்பட்ட ஸ்தானாதிபதிகளைப் போலிருப்பவர்கள் **அதிதூதராம்.** தேசங்களையும் திருச்சபையையும் காத்து நடத்துவது இவர்கள் வேலை. சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் நடுவில் சாதாரண விஷயங்களில் தூதாய் நிற்பவர்கள் ஒன்பதாம் விலாச சபையில் சேர்ந்தவர்களாகிய **தூதர்கள்** எனப்படுவார்கள்.

**நன்றி: சேசுநாதருடைய திரு இருதய தூதன்** Vol. 46 - No. 10, Oct. 1933.

இத்தாலியில் நேப்பிள்ஸ் மாகாணத்திலுள்ள சிப்போன்தோ மேற்றிராசன மேற்றிராணியாருக்கு கார்கோனோ மலையின் மீது அர்ச்.மிக்கேல் சம்மனசானவர் காட்சி கொடுத்ததின் நினைவாக ஒரு தேவாலயம் கட்டப்பட்டது. இத்தேவாலயம் 1515 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். கி.பி. 1656!ல் அந்நகரில் தொற்று நோய் பரவியிருந்தபோது மீண்டும் ஒரு முறை அதிதூதர் தோன்றி அந்நகரைக் காப்பாற்றினார். அதிதூதரின் பாதுகாப்பை வேண்டி அநேக அர்ச்சியசிஷ்டவர்கள் இத்திருத்தலத்திற்கு சென்று வந்தார்கள்.



# புண்ணிய பயிற்சிக்குரிய அறிவுரைகள்

திருச்சபையின் வேதபாரகரான அர்ச். பிரான்சிஸ் சலேசியார் எழுதிய ''பக்தி நெறி வழிகாட்டி'' என்ற அரிய நூலிலிருந்து எடுக்கப்பட்டது. (ஆ!ர்.)

## புண்ணியங்களின் மேன்மை

புண்ணிய பயிற்சியும் பக்தி வாழ்க்கையும் தவிர வேறெதுவும் இவ்வுலகில் உனக்கு இன்பம் தரமுடியாதென்பதை நன்றாக உணர்ந்துகொள். புண்ணியங்களின் மேன்மையை யும் அழகையும், நாம் ஒரு சிறிதேனும் அறிந்துகொள்ள விரும்பினால், அவற்றிற்கு எதிரான துர்க்குணங்களோடு அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். பகையைவிடப் பொறு மையும், செருக்கைவிட தாழ்ச்சியும், பேராசையைவிடப் பெருந் தன்மையும், பொறாமையைவிடப் பிறரன்பும் எவ்வளவு மேலானது! நாம் ஒரு புண்ணியச் செயலை செய்த பிறகு, அந்தப் புண்ணியம், நம் ஆன்மாவில் ஒருவகை இனிமையைப் பரப்புகின்றது. இது புண்ணியத்திற்கே சிறப்பான இயல்பாகும். ஆனால் ஒரு பாவச் செயலைப் புரிந்த பிறகு அந்தப் பாவம் நம் ஆன்மாவைச் சோர்வுறச் செய்கின்றது. ஆன்மாவை வருத்து வதும், துன்புறுத்துவதும் துர்குணத்திற்கே உரிய இயல்பாகும். அவ்வாறெனில், புண்ணியம் நமக்குத் தரும் தூய இன்பத்தைத் துய்க்க, நாம் தயங்குவது எவ்வளவு மடமையாகும்!

ஒருவனிடம் ஒரு சிறிது துர்க்குணம் இருந்தாலும் அவன் மகிழ்ச்சியாயிருக்க முடியாது. அவனிடம் துர்க்குணம் மிகுந்திருந்தால், மிகுந்த துன்ப வருத்தங்களுக்கு உள்ளாவான். ஆனால், ஒருவனிடம் ஒரு சிறிது புண்ணியமிருந்தால், சிறிதேனும் இன்பம் அடைவான். புண்ணியம் பெருகப் பெருக இன்பமும் பெருகிக்கொண்டே வரும்.

பக்தி வாழ்க்கை, எவ்வளவு இனிமையும் வனப்பும் இன்பமும் நிறைந்தது! நம் துயரங்களைத் தணித்து, நம் வாழ்க்கையில் ஆறுதலும் இனிமையும் தரவல்லது. பக்தியில்லாத நன்மையெல்லாம் தீமையாகும். இன்பமெல்லாம் துன்பமாகும். இந்த உண்மையை உள்ளூர உணர்ந்தவர்கள், சமாரியப் பெண் மன்றாடினது போல் ''ஆண்டவரே, இந்த தண்ணீரை எனக்கு அளித்தருளும்'' என்று உருக்கமாக வேண்டுவார்கள். புனித அவிலா தெரேசம்மாள், ஜெனோவா கத்தரீனம்மாளும் இந்த மனவல்லியச் செபத்தை அடிக்கடி சொல்லி வந்தார்கள்.

## கவலையும் கலக்கமுமின்றி, கவனத்துடன் நம் கடமைகளைச் செய்ய வேண்டும்

நம் அன்றாட வாழ்வின் அலுவல்களை மிகுந்த கவனத்துடன் நுணுநுணுக்கமாய் செய்ய வேண்டும் எனினும், அவற்றின் கலக்கமும், கவலையும் காட்டவேண்டிய தேவை எதுவுமில்லை. நாம் காவல் தூதர்கள் நம் ஈடேற்றத்திற்காக அயராமல் கவனமாக உழைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் இந்த அலுவலில் கவலையோ கலக்கமோ கொள்வதில்லை. கவனமும் உழைப்பும் அவர்களது அன்பின் அலுவல் எனினும் கவலையும் கலக்கமும் அவர்களது மோட்ச இன்பத்திற்குப் பொருந்தாது. நமதான்மாவின் அமைதியைக் குலைக்காம லேயே ஓர் அலுவலில் மிகக் கவனமாக ஈடுபட முடியும். ஆனால், கவனத்தின் எல்லைக்கோட்டைத் தாண்டி, கவலையையும் கலக் கத்தையும் வரவழைத்தால், ஆன்ம அமைதி குலைந்துதான் தீரும். ஆகவே, பக்தியுள்ள ஆன்மாவே! கடவுள் உன்னிடம் ஒப் படைத்திருக்கும் அலுவல்களைக் கவனமாகவும் நுணுநுணுக்க மாகவும் நீ செய்யவேண்டுமென்பது கடவுள் திருவுளம்; ஆனால், கவலையோடும் கலக்கத்தோடும் அவற்றைச் செய்யவேண்டு மென்பது அவர் சித்தமல்ல. உன் அலுவல்களில் மிதமிஞ்சின ஆர்வம் காட்டவேண்டாம். எல்லை மீறிய ஆர்வமும் பதற்றமும் பகுத்தறிவையும் விவேகத்தையும் குலைத்து, நாம் ஆற்ற விரும்பும் அலுவலைச் செம்மையாகச் செய்துமுடிக்க இடையூறா யிருக்கும்.

ஆண்டவர் மார்த்தாளின் பதற்றத்தைக் கண்டித்துப் பேசுகையில், ''மார்த்தா மார்த்தா! நீ பற்பல அலுவல்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்'' என்றார். கவனத்தோடு மட்டும் தன் வேலைகளைச் செய்திருந்தால் அவள் கலங்கி யிருக்கமாட்டாள்; ஆனால் கவலைக்கு இடங்கொடுக்கவே, பதறித் தவித்தாள்; ஆகவே ஆண்டவர் அவளைக் கண்டித்தார். சமவெளிகளில் அமைதியாக ஓடும் நதிகள் போக்குவரத்திற்கும், வியாபாரத்திற்கும் உதவும்; ஆனால் கரைபுரண்டோடும் வெள்ளப் பாய்ச்சல் வயல்வெளிகளைப் பாழ்படுத்துகின்றது.

அமைதியாகப் பெய்யும் மழை நிலங்களைச் செழிப்புறச் செய்யும்; பேய் மழையும் புயலும் பயிர்களை அடித்துச் செல்லும். இவ்வாறே, பதற்றத்தோடும் கலக்கத்தோடும் செய்யும் எந்த வேலை யும் பயன் தர இயலாது. ''அமைதியாக விரைந்து செய்'' என்பது ஆன் றோர் வாக்கு. ''விரைவாக நடப்பவன் கால் தடுக்கி விழக்கூடும்'' என்று ஞானியாகிய சாலமோன் எச்சரிக்கை தருகின்றார். நாம் ஒரு வேலை யை கவனமாகச் செய்யும் பொழுது போதிய அளவு விரைவாக வேதான் செய்கிறோம். ஆண் தேனீக்கள் பெண் தேனீக்களைவிட இரைச்சல் போட்டு படபடப்பாகப் பறக்கும்; ஆனால் அவை தேன் தரா. இவ்வாறே, எல்லைமீறிய கவலையோடும் பதற்றத்தோடும் திரிபவர்கள் உருப்படி யான எந்த வேலையையும் செய்ய முடியாது.

பல்வேறு அலுவல்களை ஒரே மூச்சில் செய்ய முற்படும்போது நம் மனவலிமை தளர்வுறுகின்றது. ஆகவே, நம் அன்றாட வாழ்வின் அலுவல்களை ஒன்றன்பின் ஒன்றாக, ஒழுங்காக, அமைதியாகச் செய்து முடிப்போம். எல்லா வேலைகளையும் ஒரே முறையில், ஒழுங்கும் கிரம மும் பாராட்டாமல், செய்து முடிக்க முயன்றால் நம் மனவுறுதி தளர்ந்து போகும். அந்த வேலைகளின் பளு நம்மைத் திணற வைக்கும்.

ஆகவே நம் அலுவல்கள் அனைத்தையும் கடவுளிடம் ஒப்படைப்போம். ஏனெனில், கடவுளொருவர்தாம் நமக்கு வெற்றியைத் தர வல்லவர். நம்மால் இயன்ற அளவு அமைதியாகப் பதட்டமின்றிக் கடவுளோடு ஒத்துழைப்போம். கடவுளை நம்பி நாம் ஓர் அலுவலில் ஈடுபட்டால், நாம் ஏமாற்றமடைய மாட்டோமென்பது உறுதி; அந்த அலுவலின் பயன் நம்மையாகவோ தீமையாகவோ நம் அறிவுக்குத் தோன்றக்கூடும்; எனினும், இறுதியில் எல்லாம் நமக்கு நன்மை யாகத்தான் முடியும்.

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்


## - அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

### (10) நவீன ஞானோபதேசம்

கத்தோலிக்கர்களிடையே நான் அடிக்கடி கேள்விப்படும் முறைப்பாடு - இவர்கள் நம்மேல் ஒரு புதிய மதத்தைத் திணிக்கிறார்கள்!" என்பதே.

இது மிகைப்படுத்தப்பட்ட வாக்கியமா? திருச்சபையில் எங்கும் ஊடுருவி ஆட்டிப்படைக்கும் நவீனர்கள் முதலில் நம்மை தேற்றுபவர்களைப் போல, "ஒன்றும் மாறவில்லை. சில பழைய காலாவதியான முறைகள் தவிர்க்க முடியாத கட்டாயமான காரணங்களால் மாற்றப்பட்டுள்ளன. பண்டைய காலத்தில் மக்கள் ஜெபித்தது போலவே, நாம் இன்றும் ஜெபிக்க முடியாது, தூசிகளைத் தட்டி நீக்கவேண்டும். இந்தக் கால மக்களுக்குப் புரியும் ஒரு மொழியை நாம் தேர்ந்துகொள்ள வேண்டும், பிரிந்து போன சகோதரர்களை ஏற்றுக்கொள்ள நம் மனதை திறக்கவேண்டும்... ஆனால், ஒன்றுமே மாற்றப்படவில்லை" என்பார்கள்.



சிறிது காலம் கடந்த பின், 'மிக்க கவனமாகப்' பேசுவதை கைவிட்டு, அவர்களில் துணிவு மிக்கவர்கள் தங்களிடையேயும், ஏன் பொதுவில்கூட 'மாற்றம் உண்டு' என ஒப்புக்கொள்வார்கள். சங். கர்தோனல் என்ற ஒரு குருவானவர், ஒரு புது மதத்தைப் போதித்தார். அதில் "சர்வேசுரன் எங்கும் வியாபித்திருக்கிறார் என்ற அவரது இலட்சணம் அவரை சகல லோகங்களின் அரசராக ஆக்குவதை ஏற்க முடியாது" என்கிறார். அவர் லூரவாசி என்பவரின் நவீனத்தை அப்படியே ஏற்கிறார். (இந்த லூரவாசி தமது நவீனப் போதனைகளினால் திருச்சபை விலக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது - ஆ-ர்.) நீ கிறீஸ்தவக் குடும்பத்தில் பிறந்ததால் நீ கற்ற ஞானோபதேசம் ஒரு மதத்தின் எலும்புக்கூடுதான். (கிறீஸ்தவம்) மதம் தன் உயர்நிலையில், முதலாளித்துவ சார்பாகத் தோன்றும் என்று போகிறது அவரது போதகம். கர்தினால் சூனென்ஸ் தமது இஷ்டப்படி திருச்சபையின் நியதிகளை மாற்றிக்கொண்டு, "அகலமான (பல வகையான) இறை இயல்களுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டும்" என்கிறார். திருச்சபை போதிக்கும் சத்தியங்களை (1) அதிகமாக விசுவசிக்க வேண்டியவை, (2) குறைவாக விசுவசித்தாலே போதுமானவை, (3) முக்கியமற்ற சத்தியங்கள் என்று வகைப்படுத்த வேண்டும்" என்கிறார்.

1973-ல் பாரீஸ் அதிமேற்றிராணியார் இல்லத்தில் சங். பெர்னார்ட் ஃபியே சுவாமிகள் என்பவர் அதிகாரப்பூர்வமாக, "வயது வந்தோருக்கான கிறீஸ்தவ உருவாக்கம்" என்ற தலைப்பில் தொடர் உரையாற்றினார். அவற்றில் திரும்பத் திரும்ப அவர் கூறியவை: "கிறீஸ்து மரணத்தை வெல்லவில்லை. அவர் சாவினால் சாகடிக்கப்பட்டார். உயிரளவில் கிறீஸ்து வெல்லப்பட்டார். நாமும் அப்படி வெல்லப்படுவோம். உண்மை நிலை என்னவென்றால், 'விசுவாசம்' எதனாலும் நீதிபடுத்தப்படவில்லை. 'அது' உலகத்திற்கு எதிரான ஒரு குரலாக இருக்கவேண்டும். (இந்தக் குரல்) தன் மூடத்தனத்தை உணர்வதிலோ, நாசத்தை உணர்வதிலோ, ஒன்றுமில்லாமை என்ற நிஜத்தை உணர்வதிலோ முடியும்".

திகைக்கவைக்கும் எண்ணிக்கையில் இது போன்ற துர்மாதிரிகைகளை என்னால் கூற முடியும். இந்த துர்மாதிரிகைகளின் அளவு வேறுபட்டு இருக்கலாம். சில திருத்தப்பட்டன. சில திருத்தப்படவில்லை. விசுவாசிகள், மேற்சொன்ன அபத்தங்களை செய்தித் தாள்களில் பார்க்கும்போது, இது சிலருடைய குருட்டாட்டம், இது 'நமது விசுவாசத்தை' பாதிக்காது என்று தள்ளிவிடுகிறார்கள். ஆனால், இவை தங்கள் பிள்ளைகளின் கைகளில் 'ஞானோபதேசம் - மறைக்கல்வி' என்று

கொடுக்கப்படும் போது, எப்போதுமே போதிக்கப்பட்டு வந்த 'கத்தோலிக்க ஞானோபதேசம்' இல்லாததைக் கண்டு கவலைப்படுகிறார்கள்.

எல்லா வகை 'நவீன உபதேசங்களும்' 1966!ல் வெளியான 'டச்' (டென்மார்க்) நாட்டு 'ஞானோபதேசத்தின்' தாக்கத்தினைக் கொண்டுள்ளன. இந்த டச் வெளியீடு எவ்வளவு 'தப்பறை' நிறைந்தது என்றால் , அது வெளிவந்த உடனேயே பாப்பரசர் இந்த வெளியீட்டை பரிசீலிக்க கர்தினால்மார்களின் குழு ஒன்றினை ஏற்படுத்தினார். 1967 ஏப்ரலில் இந்த கர்தினால்மார் குழு லொம்பார்டியில் உள்ள காசாடாவில் கூடியது. அதன் ஆய்வின் முடிவில், இக்குழு 10 அம்ச மாற்றங்களை உத்தரவிட பாப்பரசரிடம் கோரியது. அதாவது திருச்சபையின் போதனைக்கு விரோதமான இந்த வெளியீடு இருந்தது. ஆனால் சில வருடங்களுக்கு முன்பு (2!ம் வத். சங்கத்திற்கு முன்பு) இச்சம்பவம் நிகழ்ந்திருந்தால் 'இந்த வெளியீடு' உடனே கண்டனம் செய்யப்பட்டு, திருச்சபையால் விலக்கப்பட்ட நூல் பட்டியலில் (Index) சேர்க்கப்பட்டிருக்கும்! டச் வெளியீட்டின் தப்பறைகள் அடிப்படை விசுவாசத்தைப் பாதிப்பவை.

இந்த டச் வெளியீட்டில் என்ன காண்கிறோம்? அது 'சம்மனசுகளை' ஏற்பதில்லை. சர்வேசுரன் மனிதனின் ஆன்மாவை நேரடியாகப் படைக்கிறார் என்பதை மறுக்கிறது. ஜென்மப்பாவம் ஆதித்தாய் ! தகப்பன் வழியாக மனித பிறப்பில் வராமல், ஒரு நோயைப் போல மனிதன், மனித சமுதாயத்தில் வாழ்வதால் தொற்றிக் கொள்கிறது. தேவமாதாவின் கன்னிமையை அது ஏற்கவில்லை. நமதாண்டவர் நமது பாவங்களுக்குப் பரிகாரமாக மரித்தார் என்றோ, இந்தக் காரணத்திற்காகவே பிதாவாகிய சர்வேசுரனால் நமதாண்டவர் அனுப்பப்பட்டார் என்றோ, நமதாண்டவரின் இந்தக் கிரயத்தினாலேதான் தேவ இஷ்டப்பிரசாதம் நமக்கு மீண்டும் தரப்பட்டது என்றோ ஏற்பதில்லை. அதனால் 'திவ்விய பலிபூசை' ஒரு பலியாக அல்லாமல், அது 'வெறும்' விருந்து என்று கூறப்படுகிறது. திவ்விய நற்கருணையில் நமதாண்டவரின் உண்மைப் பிரசன்னமும், திவ்விய பலிபூசையில் வசீகரத்தின் உண்மையும் தெளிவாக ஏற்கப்படவில்லை.

இதில், கத். திருச்சபையின் தவறா வரம், 'சத்தியத்தை' அது மட்டுமே கொண்டிருக்கும் உண்மை நிலை, 'மனித புத்தி', கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட தேவ இரகசியங்களை அறிக்கையிடவும் ! அடையவும் முடியும் என்ற நிலை எல்லாம் மறைந்து விட்டன. 'கடவுளை அறிய முடியாது என்னும் நிலைக்கும், சகலரும் 'தற்சார்பு' (absolute) தன்மையின்றி, 'வெளிச்சார்பு' (relativism) மட்டுமே கொண்டவை என்ற நிலைக்கும் தள்ளப்படுகிறோம். தனித்துவ குருத்துவம் குறைக்கப்பட்டு மழுங்கடிக்கப்படுகிறது. மேற்றிராணித்துவம், 'கடவுளின் மக்களால்' அவருக்கு ஒப்படைக்கப்பட்ட ஒரு பணி என்றும், அவருடைய போதக அதிகாரம் மக்களால் விரும்பப்படுவதை, நம்பப்படுவதை அனுமதிக்கவே உள்ளது' என்கிறது. பாப்பானவருக்கு இனிமேல் முழுமையான, எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரம் கிடையாது!'' என்று போகிறது இந்த டச் ஞானோபதேசம்!

அர்ச். தமதிரித்துவத்தின், மூன்று ஆட்களாக ஒரே சர்வேசுரன் இருக்கும் சத்தியமோ, சரியாகக் கூறப்படவில்லை. (மேலும் கர்தினால்மார் குழு ! தேவதிரவிய அநுமானங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தையும், 'அற்புதம்', 'புதுமை' என்பவைகளுக்கு கொடுக்கப்பட்ட இலக்கணத்தையும், மரித்தவுடனே புண்ணிய ஆத்துமங்களின் கதியை பற்றிய விளக்கத்தையும் கண்டித்தது.) நல்லொழுக்கம் பற்றிய போதனையும் தெளிவாக இல்லை. மேலும், 'மனசாட்சிக்கு ஏற்ப' காணப்படும் தீர்வுகள் உடைக்க முடியாத திருமண பந்தத்தை மலிவாக்கி உள்ளன.

'டச்' வெளியீட்டில் மேற்சொன்னவைகள் போக இன்னமும் மீதம் உள்ள பகுதி "நல்லதாய், பாராட்டும் வகையில் உள்ளது" என்று கர்தினால்மார் குழு கூறுகிறது. அர்ச். 10!ம் பத்திநாதர், "நவீனர்கள் எப்போதுமே, சத்தியத்தையும், தப்பறையையும் கலப்பார்கள்" என்று எச்சரித்துள்ளதால், இவை நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. விசுவாசத்துக்கு மிக ஆபத்தானது என்று நாம் இந்த 'டச்' வெளியீட்டைக் கூற பல காரணங்கள் உள்ள நிலையில், இதன் வெளியீட்டாளர்கள், கர்தினால்மார் குழுவின் அறிக்கைக்கு காத்திருக்கவில்லை. முழு வீச்சில் வேக வேகமாக இந்த தப்பறையான வெளியீட்டை பல மொழிகளில் மொழிபெயர்த்து, வெளியிட்டு வந்தனர். கர்தினால்மார் குழு சுட்டிக்காட்டிய தப்பறைகள் திருத்தப்படவேயில்லை. சில சமயங்களில் கர்தினால்மார் குழுவின் அறிக்கையும் இவ்வெளியீட்டுடன் இணைக்கப்பட்டு வெளியிடப்பட்டன! இந்தக் காரியத்தில் கீழ்ப்படியாமல் இருந்தது யார்? இந்த தப்பறையான ஞானோபதேசத்தை கண்டித்தது யார்?

(தொடரும்)

## ஜெபத்தில் நீடித்து நிலை நிற்றல்!

கேட்பதிலும் தேடுவதிலும் தட்டுவதிலும் நீடித்து நிலை நிற்பவனே பெற்றுக்கொள்வான், கண்டடைவான், அவனுக்கே திறக்கவும் படும். சில வரங்களை நாம் இறைவனிடம் ஒருமாதம், ஒருவருடம், பத்து அல்லது இருபது வருடம் வரைக்கும் கேட்பதுகூட போதாது. கேட்பதில் நாம் ஒருபோதும் தளரவே கூடாது. நாம் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். மரணம் வரையிலும் கேட்க வேண்டும். இப்படிப்பட்ட ஜெபம் சர்வேசுரன் மீது நாம் கொள்ளும் நம்பிக்கையைக் காட்டுகிறது. இதிலும் கூட நீடித்து நிலை நிற்கும் எண்ணத்தோடு நாம் மரணம் பற்றிய நினைவையும் சேர்த்துக்கொண்டு: அவர் என்னைக் கொன்றாலும் நாம் அவரை நம்புவேன் (யோபு. 13:15), எனக்குத் தேவையானதை யெல்லாம் அவர் தருவார் என நம்புகிறேன் என்று நாம் கூறவேண்டும்.

ஜெபமாலையின் இரகசியம்: ரோஜா மலர் 48

# செய்திகள்

## ★ லூத்தருக்கு புகழ்ச்சி ! திருச்சபைக்கு இகழ்ச்சி!

ஜெர்மன் நாட்டின் வட பகுதியில் உள்ள ஒஸ்நாப்ருக் மேற்றிராசண மேற்றிராணியார் வந். ஃபிரான்ஸ் ஜோசப் போர்டு திருச்சபையின் எதிரியும் பதிதனுமாகிய மார்ட்டின் லூத்தரை புகழந்து பேசியிருக்கிறார். புராட்டஸ்டாண்ட் பத்திரிகை ஒன்றிற்கு கொடுத்த பேட்டியில், "லூத்தர் சரியாகத்தான் திருச்சபையின் குறைகளைக் கண்டித்தார்" என்றும், "விசுவாசத்தின் வேர்கள் என்னவென்று ஞாபகப்படுத்தினார்" என்றும், "2ம் வத். சங்கம், கிறீஸ்துவைக் குறித்து வெவ்வேறான மாறுபாடான 'விசுவாசங்கள்' இருக்க முடியுமென்று ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு கத். திருச்சபையை இட்டுச்சென்றுள்ளது" என்றும் கூறினார். அதே சமயத்தில், ஃபுல்டா மேற்றிராசனத்தில் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் சிற்றாலயம் அமைக்கப்பட்டதையும், கடந்த சில வருடங்களாக இந்நகருக்கு வரும் திருயாத்திரையை கண்டித்தும், விசுவாசிகளை அங்கு செல்ல வேண்டாமென்று எச்சரித்தது.!

## ★ மலங்கரை திருச்சபை நடத்திய சர்வசமய கூட்டம்!

செப்டம்பர் 20ம் தேதியில் களியக்காவிளைக்கு அருகேயுள்ள மரியகிரியில், பிரிவினை சபையாக இருந்த மலங்கரே சபை, கத்தோலிக்க திருச்சபையோடு இணைந்த 79வது ஆண்டு நினைவு அநுசரிக்கப்பட்டது. அச்சமயம் இந்துக்களையும் இஸ்லாமியர்களையும், பதிதர்களையும் அழைத்து சர்வமதக் கூட்டத்தை நடத்தினார்கள்! முன்பு கத். திருச்சபையோடு இணைவதற்கு காரணமாயிருந்த கொல்லம் மேற்றிராசன மேற்றிராணியார் வந். பென்ஸிகர் ஆண்டகையின் ஸ்தானத்தில் தற்போது இருக்கும் மேற்றிராணியார் புறக்கணிக்கப்பட்டார். ஆனால் கோட்டாறு மேற்றிராணியாரும், மதுரை அதிமேற்றிராணியாரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ★ ரோம் ! ஈக்கோன் பேச்சு வார்த்தை அக்டோபர் மத்தியில் நடைபெறவிருக்கிறது.

வந். லெஃபவர் ஆண்டகை ஸ்தாபித்த அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபைக்கும் வத்திக்கான் திருச்சபை அதிகாரிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் அக்டோபர் மாதம் மூன்றாம் வாரத்தில் நடைபெறுமென்று வத்திக்கான் பத்திரிகை அலுவலக இயக்குனர் சங். ஃபெடரிக்கோ லம்பார்டி உறுதிபடுத்தியுள்ளார். வத்திக்கான் சார்பிலே அர்ச். சாமிநாதர் சபைச் சார்ந்த சுவிட்சர்லாந்து நாட்டவரான சங். சார்லஸ் முரேரோ, சேசு சபையைச் சார்ந்த ஜெர்மனி நாட்டவரான கார்ல் ஜோசப் பெக்கர் சுவாமிகள், ஓப்புஸ்தேயி சபையின் முதன்மைக் குருவான சங். பெர்னாண்டோ ஒக்காரிஸ் ப்ரானா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

வியன்னா அதிமேற்றிராசன அதிமேற்றிராணியாரான கர்தினால் ஷோன்போன், இப்பேச்சு வார்த்தைகளில், மாற்ற முடியாதவைகளின் பட்டியலில் உள்ள மத சுதந்திரம், கத். திருச்சபை ! யூத உறவு போன்றவற்றை அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப்படும் என்று கூறினார்!

## ★ பாப்பானவர் பாத்திமாவிற்கு விஜயம்!

போர்ச்சுகல் நாட்டு அரசு அதிகாரிகளின் தகவல்களின்படி பரி. பாப்பரசர் அடுத்த வருடம் பாத்திமா திருத்தலத்திற்கு செல்ல இருப்பதாக தெரியவருகிறது. மே 13ம் தேதி பாத்திமா மாதா திருநாளின் போது அங்கு செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண பயணத்திற்கு சில வாரங்கள் முன்பு மட்டுமே உறுதிபடுத்தும் வழக்கம் கொண்டுள்ள வத்திக்கான், மேற்கூறிய தகவல் குறித்து எந்தவித கருத்தும் வெளியிடவில்லை.


## ★ முழங்காலிலிருந்து நாவில் திவ்விய நன்மை வாங்கும் முறை!

லீமா மேற்றிராசன பேராலயத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தில் கர்தினால் ஜுவான் லூயிஸ் சிப்பிரியானி, "முழங்காலிலிருந்து நாவில் வாங்கும் முறையே திவ்விய நற்கருணையை ஆசாரத்துடன் உட்கொள்ளும் விதமாகும். தேவநற்கருணைக்கு கொடுக்கவேண்டிய சங்கை மரியாதையை நாம் கண்டுணர்ந்து கடைபிடிக்க வேண்டும். ஏனெனில் சேசுவின் மீதான சிநேகமே கிறீஸ்துவ ஜீவியத்தின் மையம்" என்றார்.

### தேவ இஷ்டப்பிரசாதமும் அத்துடன் கொடுக்கப்படும் கொடைகளும்!

**தேவ இஷ்டப்பிரசாத அதிகரிப்பினால் தேவ சம்பந்தமான புண்ணியங்களில் விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகம் ஆகியவைகளும் வளர்ச்சியடைகின்றன. இது மட்டுமல்ல, இஸ்பிரீத்து சாந்துவின் ஏழு வரங்களும் நமக்கு வருகின்றன. தலையான புண்ணியங்களும் இன்னும் ஆன்மீக புண்ணியங்களும் நமக்கு கொடுக்கப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறினால் தேவ இஷ்டப் பிரசாதம் நம்மை தப்பறைகளிலிருந்து காத்து உண்மையான ஞான ஒளியைத் தருகிறது. இந்த ஒளியே இஸ்பிரீத்துசாந்துவின் முக்கியமான வரமாகும்.**

*கேள்வி:* தான் தேவ இஷ்டப்பிரசாத நிலையில் (State of Grace) ! சர்வேசுரனுக்கு பிரியமுள்ளவனாக இருப்பதாக ஒருவன் அறிந்துகொள்ள முடியுமா?




*பதில்:* சர்வேசுரனுடைய விசேஷ வெளிப்படுத்துதல் இருந்தாலன்றி ஒரு ஆத்துமம் தேவ இஷ்டப்பிரசாத நிலையில் உள்ளது என்று எவரும் நிச்சயமாக கூற முடியாது. தேவ இஷ்டப் பிரசாதம் என்பது சுபாவத்திற்கு மேற்பட்ட ஒன்று. சிலர் எண்ணுவது போல, நமது இருதயத்தில் எழும் இதமான, வாஞ்சையான உணர்வுகளில் இருப்பதில்லை. இது சிருஷ்டிகருடைய ஜீவியத்தில் சிருஷ்டி பங்குகொள்ளும் மகா உந்நதமான நிலை. சர்வேசுரனை ''எங்கள் பிதாவே'' என்று அழைக்கவும், ''பரலோக இராச்சியத்தின் வாரிசு'' என்ற உரிமையையும் நமக்கு பெற்றுத் தருகிறது.

சிறிய குழந்தை ஞானஸ்நானம் பெற்ற பிற்பாடு அது தேவ இஷ்டப்பிரசாத நிலையில் உள்ளது என்று நாம் உறுதியாகக் கூறலாம். வயதுவந்தவர்களோ தனது அழியாத ஆத்துமத்தை காப்பாற்றிக்கொள்வதற்கும், சர்வேசுரனைப் பிரியப்படுத்துவதற்கும் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்போது தேவ இஷ்டப்பிரசாத நிலையில் இருப்பதாக **நம்பலாம்**. அர்ச். சின்னப்பபர் கலாத்தியருக்கு எழுதுவது போல, ''...நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் சர்வேசுரனுடைய சமுகத்தில் நீதிமானாகிறதில்லை என்பது வெளியரங்கமாகிறது. ஏனெனில் நீதிமான் விசுவாசத்தினால் பிழைக்கிறான்'' ( கலாத். 3:11 ). ''...முந்தின பலனைப் பெற்றவர்களாகிய நாமும் கூட நம்முடைய மீட்பாகிய தேவபுத்திர சுவீகாரத்துக்கு காத்திருந்து, நமக்குள் பிரலாபித்து பெருமூச்சு விடுகிறோம். ஏனெனில் நம்பிக்கையினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம்'' (உரோ. 8:23, 24). ''...நம்பிக்கை நமது ஆத்துமத்துக்கு ஷேமமும் உறுதியும் திரையின் உட்பாகத்துக்குள் செல்லுகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கின்றது'' (எபி. 6:19).

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை :**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை :**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம் :**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 9442625158

**நாகர்கோவில் :**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 9442625158

**தூத்துக்குடி :**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9442625158.

**திருச்சி:**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3!வது மெயின் ரோடு, ஸ்ரீனிவாசா நகர்,
திருச்சி ! 620 017.
தொலைபேசி எண்: 0431 - 2782798.

**சென்னை :**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 044-22355389; 9791134344; 9445122353; 9444685103.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி.**

**ஆர். என். கண்டிகை :**
ஜென்மஇராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.


# *Salve Regina*

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: 0462-2586201; 2572389; 2572177 - Mobile: 9442625158.
e-mail: salvereginapress@gmail.com *or* salvereginapublications@gmail.com